85893

O-,892,MDSb,P
N27
85893

உ

கடவுள் துணை.

பர்வதமகாராஜன் மகளாகவந்த

# பார்வதி
# கலியாண நாடகம்

Acc. No. 85893
Pages. 62 p.



REGISTRAR OF BOOKS
29 MAR 1928
MADRAS

இவை

மேல்பட்டாம்பாக்கம்

சங்கர அய்யர் மாணிக்க... ஆகிய

கொஞ்சிகுப்பம்

துரைசாமிசமஷ்டியாரா லியற்றியதை

இஃது,

கூடலூர். கு. வை. வீரப்படையாச்சியாரிடம்

சகலசுதந்தரமும் பெற்றுக்கொண்டு

கூடலூர் புஸ்தகவியாபாரம்

## ம. தி. முருகேசமுதலியாரால்

சென்னை:

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1927.

இதன் விலை] ரிஜிஸ்டர் காப்பிரைட் [அணா 5.

கடவுள் துணை.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனல் சகலமானவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில் கூடலூர் புஸ்தகவியாபாரம் ம. தி. முருகேச முதலியார் அவர்களால் பார்வதிகலியாணமென்னும் நாடகத்தை அநுசரித்து சகலசுதந்தரமும் பெற்றுக்கொண்டு அச்சிட்டிருப்பதால் இந்த நாடகத்தை யாதாமொருவர் அச்சிடுவார்களாகில் 1867-வது வருஷம் 25-வது ஆக்டின் 20-வது பிரிவு 6-வது விதியின்படி (ரிஜிஸ்டர் காப்பிரைட்) பெற்றிருக்கிறபடியால் இதை அச்சுகூடத் தலைவரும் மற்றெவர்களும் அடியில் கண்டிருக்கிற என்னுடைய அனுமதியன்றி அச்சிடப்படாது வேறுபாஷையிலும் மொழி பெயர்த்தும் அச்சிடப்படாது அப்படி சட்டத்திற்கு விரோதமாகச் செய்வார்களாகில் அதனல் நேரிடும் கஷ்டத்தையும் கொடுப்பதன்றி கோர்ட்டின் மூலமாய் தண்டனைக்குள்ளாவார்கள்.

இப்படிக்கு,

ம. தி. முருகேசமுதலியார்.

புஸ்தகவியாபாரம், கூடலூர்.

85893

கடவுள் துணை.

பற்வதமகாராஜன்மகளாகவந்த

# பார்வதி கலியாண நாடகம்

## விநாயகர்காப்பு-கவி.

சத்தியினுருவமதா வந்தமர்ந்த
சண்முகர்க்குசகோதரனு தோன்றியிந்த
அத்தியுருகொண்டுவந்த கயன்முகன்தன்
அவனிடமேழ்கொம்பின் ஒடித்துபின்னும்
மத்தகத்தால்சமர்புரிந்து ஜெயமேதந்த
மதகெஜமும்புசபலமும் அன்னாள்தன்னில்
வித்தைபுத்தியர்வையுமே அன்பருக்கு
வேணவரந்தரும் விநாயகர்காப்புதானே.

## பற்வதராஜன் வருகிறகவி.

மாத்துயர்ந்தமணிமகுடம் சிரசில்மின்ன
மகரம்போல்குண்டலங்கள் செவியில்துன்ன
சாத்துயர்ந்தமாலையது மார்பிலாட
தையலரும்பக்கல்நின்று கௌரிபோட
ஏத்துயர்ந்தமந்திரிமார் அருகில்சூழ
இன்னிலத்துமன்னரெல்லா மடியிற்சூழ
கூத்துயர்ந்தநடனசிவன் தன்னைப்போற்றி
குறைவில்லாமலிறைவன் கொலுவதானர்.

## தரு.

திருவதுரையில்வாசன் — பற்வதமகாராஜன்
தீரன்கொலுவதாகினன் — ஜெய
மங்களமுடனேவீரன் — கொலுவதாகினன்
வருவதுரைமந்திரிகள் — வந்துஅருகில்சூழ
அருவதுகொண்டுமன்னர் — அடியினில்முடிதாழ
சு-ஆசிகள்தரம் — வாசிகள்கூற
தாசிகள்யே — திருவிசியேவர — திரு

வாநோர்தினம்புகழும் வல்லவீரக்கெம்பீரன்
தானுதனக்குயிவர்தனத்தில் மிகப்பிரதாபன்
சு-ஞாலத்தில்கீர்த்தி பெற்றிடுமாரன்
ஞாலமாம்புகழ் பொன்சிங்காரன் திரு

எல்லாகிரிகளுக்கும் இனையவனிவனாகும்
வல்லார்வுயிர்களுக்கும் நல்கிடுபவராகும்
சு-நத்தியசிவனருள் பெத்திடுமாரன்
உத்தமரெவருக்கும் வித்தையுங்கனமா திரு

சத்தியம்பொருமைவாய்மை தவறாதகுணசீலன்
நித்தியநெறிமுறை நிலைபிசகாதலோலன்
சு-நீண்டதோர்மார்கிறை பூண்டதோர்பதியாம்
ஆண்டவன்பாதத்தை கண்டருள்கிதியாம் திரு

ராஜன் கவி.

என்னிடமந்திரிமாரே யீசனாருளினாலே
பன்னியசெல்வமேன்ன பாக்கியமிருந்துமென்ன
துன்னியமணிவிளக்க ஒருசுதனில்லாப்பாவியாகி
மன்னியவிசனந்தோடும் மனம்துவாடுகிறதேயோ.

இராஜன்புலம்பல்தரு.

இமையமலைதனிலிருந்தரசாண்டேனே மந்திரிமாரே
அமையுமனை விளக்கொரு அருமைபாலனில்லை மந்திரிமாரே
சிவபூசை அரிபூசை தினமறவாமலே மந்திரிமாரே
கவனமாசெய்தென்ன காக்ஷியைகண்டதான் மந்திரிமாரே
காலெட்டுத்தர்மங்கள் நடப்பித்தவத்துமே மந்திரிமாரே
பாலனில்லாப்பெரும் பாவியுமாகினேன் மந்திரிமாரே
கூலிக்குளைத்தேனே குறைப்படுபள்ளத்தேனோ மந்திரிமாரே
காலினைக்கட்டிக் கதறியடித்தேனோ மந்திரிமாரே
ஆலயங்கோவிலை அடியோடிடித்தேனோ மந்திரிமாரே
மாலயன்பூசையில் மனநுழைவையாவிட்டேனோ மந்திரிமாரே
சத்திரம்சாவடி சாலைகள்சோலைகள் மந்திரிமாரே
குத்தகைகள்செய்துமே தொடும்பழிபெத்தேனோ மந்திரிமாரே
என்னிருபாக்கியமிவ்வளவிருந்தென்ன மந்திரிமாரே
கண்ணிலேபார்க்கசுதன் காணமல்போச்சுதே மந்திரிமாரே
வள்ளல்சிவனருளால் வாழாதும்வாழ்ந்தென்ன மந்திரிமாரே
பிள்ளையில்லாமலே பெரும்பாவியாகினேன் மந்திரிமாரே



இராஜன்கவி.

வாருநேகள்மந்திரிமாரே வருத்தமும்பட்டதென்ன
ஆரும்போதாகுமல்லால் அவசரப்பட்டாலாகா
சாருநாள்தன்னையெண்ணி சங்கரன்தன்னைப்போற்றி
பாருசேர்மொழியாளோடு பதிதனில்வாழலாமே.

வசனம்.

கேளுமந்திரிமார்களே நாமின்று புத்திரசந்தானமில்லாமல் வாதைப்பட்டிருந்தால் அதினால்வரும்பலன்ஒன்றுமில்லை ஆனதினால் என் தேவியாளான மேனாள் வார்த்தையைக் கேட்டு அவள்மனதறியவேண்டும் சீக்கிரம்என துதேவியாரை அழைத்துவாரும் மந்திரி.

மேனாள்-கவி.

இமையாரமலைக்கிறைவன்பன் யிருந்திடும்ஆசனத்தில்
சமையமேமேனாள்தானும் சதுதியெழுந்திருந்து
இமையினில்மையுந்தீட்டி நேர்பணியலங்கரித்து
அமைப்புமுன்தாதிசூழ அருவையும்வருகின்றாளே.

தரு.

மேதினியிலுயிர்பத்தினி சாதியிவளாமென்ன
மேனைமாதுவந்தாள் கணவன்புக்கல்
மேனையாள் மாதுவர்றாள்
பாதிமதியணிந்த பரமன்பாதத்தைக்கோரி
தாதியருடனேவாறாள் தையல்மனதுதேறி
சு-தந்தேவிழுமாமலர் மார்பனைநாடி
பாதகமகனறிடப் பரமனைப்பாடி மேதினி

திங்கள்வதனந்தன்னை திருவிழிமையுந்தீட்டி
தங்ககும்பஸ்தனத்தில் தளருகச்சுகள்பூட்டி
சு-தண்தளிர்மாலைகள் பாரினிலாட
பண்களில்பாவையர் பாவனைப்பாட மேதி

அரும்புமலர்மணக்கும் அளகங்கோதியேதுஞ்சா
கரும்புமலர்கரத்தில் தங்கணவளையல்மிஞ்சா
சு-காட்டினிலேவாழ் சிங்கமும்நாண
நாட்டியயிடையது நடையுமேதோண மேதி

நடையிலன்னமும்வாடும் நங்கையிவளேசாது
மடமயில்சாயலெனும் மங்கைமிகவேதோது
சு-அந்திவதநெளிவுக ளானதோர்மங்கை
சுந்திரபெறசதிலைபென மனஞ்சங்கை மேதி

மேனுள்சருண-தரு.

தாளினைக்கேசருணம் சருணமுந்தன்
ஆருவா யிதுதருணம்
தாளிதம்விளங்கிய அரையேஎந்தன்பதியே
மாலெனும்விழியான்யான் மனமகிழ்ந்தேனிதிபே-தாளி

என்னிருகண்மணியே கருத்திலாரும்
பொன்னிற நவமணியே
கன்னிருகமலத்தில் சுழலடிதன்னிலே
ச்சன்னிருகிலத்தேய தேவியான்முன்னிலே-தாளி

இமையமலைக்கிறைவே எனக்குற்ற
சமைய மிரக்குறைவே
தமையன்தந்தைதாயும் சதமல்லவேவென்று
அமையுங்கணவனே ஆகாரமேகன்று-தாளி

வரைபுஜதோளமுகா அடியாள்கண்ணில்
கிரவடி வாளமுகா
நறைமலர்காந்தனில் நங்கையாள்கொண்டுமே
துரைசாமிசொல்ப்படி தொழுதுனின்றமே-தாளி

மேனுள்-கொச்சகம்.

உலகநிலைகரிகளுக்கு ஒக்குமிமையக்கிறையே
இலகுமணிமகுடம்புனை எத்ததியில்என்துரையே
கலகமில்லாவருள்தனமே கன்னியர்க்குற்றதனமே
விலகமில்லாதாளிணைக்கே மெல்லியிகப்பணிந்தேன்.

வசனம்.

சருணம் சருணம் பிராணநாயகா இமையமலைக் கிறைவரே உமது பாதாரவிந்த கமலங்களுக்கு அடியாள் வந்தனம் தேவா.

பற்வதாரசன்-கொச்சகம்.

பாகுபசுந்தேன்மதுர பால்சுவையேபெண்மயிலே
வேகுந்தன்கண்கணையால் மெலிந்துபருடலயர்ந்து
போகுவிதமரிந்து பொற்கொடியவ்தருள்புரியும்
வாகுமணிவிளக்கே மங்கையரேநீவாழி.

வசனம்.

வாராய் பெண்மணி நீவந்து என்னை பணிந்தபடியால்மகாராசியாயிருப்பாய் ஆசீர்வாதந் தந்தேன் பெண்மணி.




மேனுள்-கவி.

கந்தகங்கமிழுங்கொன்றை கலைமதிசடையோன்தன்னுல்
குந்தகமில்லாசெல்வம் குறைவிலாதிருந்துமென்ன
இந்தகுலம்விளங்கமைந்தன் யில்லாதபாவியாகி
வெந்தகம்வாடுதையோ மெல்லிநானென்னசெய்வேன்.

வசனம்.

கேளும் பிராணநாயகா அந்த மதியாகிய சந்திரனை சடையில் வைத்த பரமசிவன் அருளால் நமக்கு ஒருசந்தானமில்லாமல் போய்விட்டதே இதற்கென்னசெய்வேன் பிராணநாயகா.



பற்வதாரசன்-கவி.

கனகும்பஸ்தனத்தினுளே கன்னியென்பிராணதேவி
எனக்குமுன் ஆசைபோல யில்லாமல்போவதில்லை
தனக்கும்பமிருந்துமென்ன தாகூழியும்செய்ததாலே
...க்கும்பம்போலேயானேன் மங்கைநானென்னசெய்வேன்.

வசனம்.

...ய் பெண்கன்னாயகமே இப்பவும் நமக்குபுத்திரசந்தான...தால் உன்னைப்போல எனக்கும் மனம்வாடி தவிக்கலானே...தற்கென்செய்வேனடி பிராணநாயகி.

மேனன்-தரு.

எந்தன்மன்னவா மைந்தனில்லாமல்
யேங்கிவாடுதே மனம்நேங்கிவாடுதே
யெப்படிமாதவப்பித்தணிவது யென்னசெய்குவேன்
சொந்தசிவன்தன்னை சொக்கதொழுதும்
சுதன்தானில்லையே பெருகபதர்தானில்லையே
சுத்தமாபிள்ளையத்துப்போச்சுதே தோன்றுமென்னமோ

சு-சோருமுடல்பாருமிதோ பேரும்பெரும்பாவி
தேரும்வழியார்சொல்லுவார் சேருங்குறையாவி எந்

பர்வதராசன்.

தெள்ளுமொழியாளே பிள்ளையில்லாமல்
தேங்கலாகுமா மனம் ஏங்கலாகுமா
திருவருள்சிவனொருவனு லெல்லாசெயலுங்கூடுமோ
வெள்ளிமலைப்பதி யுள்ளர்தன்னிலே
வெறுத்துவிட்டாரோ நம்மைவெறுத்துவிட்டாரோ
வினவியப்படிமனதில்வல்லையே வேதையாகுதே

சு-வேருவிதங்கூருவதும் சிரும்வினையாகும்
தேருமொருவாருயினி பாரும்சுதனும் தெள்

மேனன்.

இன்னிலந்தன்னில் என்னைப்போல்பெண்கள்
யில்லையில்லையே இதுயென்னதொல்லையே
எத்தனைபேர்கள்புத்திரனைவைத்து யிருக்கக்கண்டனே
தன்னிமனதினுன்னிவாடவும் கவலையாகுதே
பொல்லா தீவினையாகுதே
கண்ணால்பிள்ளைப் பெண்ணுள்பார்க்காலம்வல்லையே

சு-கவனமுந்தவபலமேயது குணசெபமோஅறியேனே
மவுனமுஞ்சிவனுல்வரும் லவமோதெரியேனே இன்

பர்வதராசன்.

வித்ததிதவம்பெற்றப்போதிலும் விதியின்வழிவிட்டா
சிவதுதிபும் பழிபட்டா
வேதவிதியோமாது தெரிந்தவெறுத்துக்கொள்ளா
கர்த்தன்செயலும் ஒத்துவரு
கண்டுதேருவா மனம்நின்றுஆறுவ
கண்ணேயென்மனக்குன்றுதின்னுலே கலங்கவென்
கண்ணேசிவன்சருண்மலர் தருணந்தெர்முகாலே
அருணவொளிகிரணத்தன் வருகுயினிமேலே வித்



மேனன்-கவி.

நேசனேபிராணநாதா திருமனைதன்னில்புத்திரன்
போஜனம்நம்மோடுண்டால் புண்ணியமென்பார்மேலோர்
யோசனைசெய்யும்போது உருகுதேபாவிநெஞ்சம்
யிசனைதொழுதும்பிள்ளை யில்லையேஎன்னசெய்வேன்.

வசனம்.

கேளும் பிராணநாயகா, நமதுமனையில் புத்திரனிருந்து நம்மோடுகூடவே போஜனமிருந்தால் இவ்வுலகில் பெரியோர்கள் சொல்லிய பழமொழிப்படி புண்ணிய மென்பார்கள் அதுபோலில்லாத நான் அந்த பரமன்செயலிருந்தும் அவர் கிருபையில்லாமல் போய்விட்டதே இதற்கென்செய்வேன் நாதனே.

பருவதன்-கவி.

வதனமும்வாடிபேசும் வதனியேநம்மால்பெற்ற
சுதனில்லைமெய்யில்தீண்ட சுகமென்றசொல்வதன்றி
மதனசொல்செவியில்கேழ்க்க மகிழ்வுமிகவுமாகும்
அதனமாபதனையெண்ணி அருவையேவாட்லானேன்

வசனம்.

கேளும்பெண்ணே பிராணநாயகி நீயோ மனங்குன்றி வாடவேண்டாம் இனி நான் ஒருசெல்வமிருந்து மதனச்சொல் செவியில் கேட்டாக்கமன்றி இருக்கின்றேனே இதற்கென்செய்வேன் பிராணநாயகி.

மேனன்-தரு.

பாபமென்ன செய்தோமோ
பத்தாவைநம்பி கர்த்தனைமறந்து செய்தோமோ
கோபக்கொடுமை ஒருசுதனெப்படிகிடைக்கும்
சோபக்திரவே யெப்படிகிடைக்கும்-பாவம்
சாபம்மனக்கவலைத்தனை

பருவதன்.

பெண்ணேவிசனம் கொள்ளாதே-அந்த
பெம்மான்சிவனைவிட நம்மால்நன்றுவதில்லை
வன்னவசனம் தள்ளாதே
கண்ணேகருகிமனம் கவலையாகுதன்னுலே
அன்னனருளால்பிள்ளை அளிப்பார்பொரும்பின்னுலே-பெண்

மேனுள்,

எப்படியிருப்பேன் — யானுமே-ஏர்தன்
குமையசலமைந்தன் — யெப்போகிடைக்கும்
சொல்ப்படி — யிருக்கநானுமே
முப்பதுபத்தமாச் — முதியவயதுமாச்சே
அப்பணியீசனினி — அருளுஞ்சதனும்போச்சே-எப்படி

பருவதன்.

என்னுவார்த்தைகள் — பேசுறுய்
என்னிருகண்மணி — பொன்னிரபெண்மணி
சொன்னுவினை — கூசுறுய்
பின்னல்வெகுபேர் — பிள்ளைபெற்றாலத்தைப்போல
இன்னுள்சிவன்களித்து — இப்போதருவார்மேலே-என்னு

மேனுள்-கவி.

சித்தில்சாருகின்ற தேசனேபிராணநாதா
கர்த்தனர்சுதனையிப்போ கடுகெனதருவாரென்றீர்
எத்தனை வயதுமாச்சு பென்னமாய்கிடைக்கும்பிள்ளை
சுத்தமாய்யெனக்குயிப்போ சொல்லுவீர்களிக்கத்தானே.

வசனம்.

கேளும் பிராணநாதா யீஸ்பரன் இப்பவே புத்திரன் அளிப்பாரென்றீரே நமக்குவயது முதமையாகிவிட்டது எப்படி புத்திரன் கிடைப்பான் அந்தவிபரத்தை சொல்லும் பிராணநாதா.

பருவதன்-கவி.

தல்லியமொழியினுளே தோகையென்பிராணதேவி
சொல்லியவிதக்கைப்போல சுதனையும்தருவாரீசன்
அல்லிபக்குளத்தில்சென்று அரும்பூசைவழக்கம்போல
மெல்லியேசெய்வோம்வாருய் மேன்மையுமாகத்தானே.

வசனம்

கேளும் பிராணநாயகி நான்சொல்லிய விதம்போல செய்த பரமசிவன் மைந்தனவா வரந்தருவார் அல்லி தாமரை செய்தல் படர்ந்திருக்கின்ற குளக்கரைசென்று ஸ்நானஞ்செய்வோம் வாருய் பெண்ணே பிராணநாயகி.



மேனுள்-தரு.

என்னிடநாதனே — உன்னிடசொற்படி
யேந்திழைதனிந்துவாரேன் — சொல்துயீரே-நாம்
சாந்திபவிசனமதை — வெல்லுவீரே

பருவதன்.

தேனெனுமொழியாளே — மேனெனும்யென்தேவி
சிந்தைகளிந்தபின்னல் — வருவாயே-நீயும்
சந்திரசேகரனருள் — பெருகாயே

மேனுள்.

நாதனேயுன்பின்னல் — மாதுசந்தோஷமா
நங்கையாள்வந்துளம் — கண்டேனே-அந்த
சங்கரனருளைக்கொண்டு — நின்றேனே

பருவதன்.

வடிவுள்ளயென்தேவி — படிகுளமிறங்கியே
வஞ்சியேமூழ்கினை. — யேகுவோமே-நாம்
அஞ்சலிசிவபூசை — செய்குவோமே

பருவதன்-கவி.

மானெனும்விழியாளான மங்கையேயிருவர்கூடி
ஸ்நானமேசெய்தகொண்டோம் சங்கரன்பூசைசெய்வோம்.

மேனுள்-கவி.

ஞானமேபெருகுமீசன் நருமலர்த்தாளைபெண்ணி
மோனமேமந்திரமோதி முக்கியப்செய்துவோமே.

பருவதன்-வசனம்.

கேளும் பெண்ணே பிராணதேவி நாமிருவருங்கூடி ஸ்நானமானது செய்தோம் அந்தபரமனை வேண்டி தபப்புரிவோம் வாருய் பெண்மணி.

மேனுள்-வசனம்,

வாரும் நாதனே தங்கள் உத்திரவின்படியே நாமிருவரும் சிவ பூசை புரிவோம் வாரும் பிராணவல்லபா.

பருவதன்-தரு.

ஆதிசிவனுதனே — ஆடலரம்பாதனே
ஓதிமேவும்போதனே — உனைத்தொழுதேசாந்தினேன்

மேனன்.

அண்டபிண்டமூர்த்தியே அருவைமனம்தேத்தியே
தொண்டர்மனஞ்சர்த்தியே தொழுதகின்றேன்பூர்த்தியே

பருவதன்.

ஆலகாலமுண்டவா அண்டருள்ளமின்றவா
பாலனருள்கொண்டவா பத்திசெய்யயென்றவா

மேனன்.

அம்பலத்திலாண்டவா அருமைநடனம்பூண்டவா
நம்புமுனத்தில்தாண்டவா கங்கையாளும்வேண்டவா

பருவதன்-கவி.

ஆதிநாயகனேபோற்றி அருமறைதாளாபோற்றி
பாதிசேர்பாகாபோற்றி பாலனுக்தருவாய்போற்றி

பொதுவசனம்.

இவ்விதமாக பருவதராசனும் மேனனும் பரமசிவனை நோக்கி தபம்புரியும்போது பார்வதியம்மன் குழந்தைவடிவமாகி அத்தடாக மீது தத்தளிக்க அப்போது பருவதராசன் நேத்திரத்தின் பார்வையாகியேதென்று சொல்லுகிறார்.

பருவதன்-கவி.

பத்தியாபூசைசெய்ப பார்வதிகுழந்தையாகி
தத்திவேசலமீதாடும் தாமரைமேல்கிடக்க

மேனன்-கவி.

நத்திவேசிவனால்வந்த நாயகியிவளாமென்ன
சித்தமுமகிழியாகி சிறுவனையெடுத்துச்சொல்வான்.

பருவதன்-தரு.

கண்ணேயெனதுஆவி பெண்ணேமகிழ்ந்ததேவி
கானமயிலே மிக்கேவாரும்-ஏந்தன்
மேனிவந்து கண்ணால்பாரும்
அண்ணல்சிவனருளால் வண்ணகுழந்தைதனை
அம்புவிதன்னில் கண்டோமே-நாமும்
இன்பக்குளிர் விண்டோமே



மேனன்.

மலைக்கதிபதியோனே இலக்கதிகிதியோனே
மாருக்கவிகளெல்லாம் போச்சுதே-நமக்கு
பேருச்சுதனின்று வாச்சுதே
சகத்திப்பதிஞான கிலைக்குப்பதியிவளே
கண்டுமேசந்தோஷ மாகினோம்-நமக்
குண்டானகலியெல்லாம் போக்கினோம்

பருவதன்.

மன்னாமுடிதனிலாடும் பிறைமுடிசடையார்க்கு
மங்கையிவளே பாரியாகுமே-நாம
சங்குங்கலியெல்லாம் போகுமே
வரையோம்நாம்விமுஞ்சேபா துரைசாமிதொழுந்தாயாள்
வந்தவளாம்பிக்க மாதுசொன்னும்
சொந்தமான குணசாது

மேனன்.

ஆலமுண்டவாமங்கை ஞாலமுண்டவாதங்கை
பாகவந்தவனிக்க செல்வி-நல்ல
போகருணை பானவல்லி
பாலன்துரைசாமிமேலுந் துதிக்கும்கேமி
பாடலுக்கருளது தந்தவள்-நமக்கு
ஆடலுக்கினியது வந்தவள்

பருவதன்-கவி.

பண்ணியதபத்தால்வந்த பார்வதியிவளேநாமும்
நண்ணியப்படிபெருட்டி காலுரைத்திட்டேன்பாராய்.

மேனன்-கவி.

திண்ணியப்பிராணநாதா சிவனருளாலேநாமும்
எண்ணியஎண்ணம்போல யீஸ்பரிமகளேயாமே.

மேனன்-தாலாட்டுதல்-தரு.

ராம்மாரூரீரோ ராம்மாரூரீராம் மாரூரீரோ ராம்மாரூரீ

சிருகபெண்கள்தபம் மீடேறவந்துதித்த
செல்வியரேபஞ்சணையில் சிரப்புடனேகண்வளராய்
முக்கனியேசர்க்கரையே முதுமறைதேன்சுவையே
அக்கரையைஅகற்றவந்த அருஞ்சுதனேகண்வளராய்

பாலேபசுக்தேனே பாலித்தின்சுவையே
கோலமணித்தீபமே குலக்கொழுந்தேகண்வளராய்
பனிமதிபிசந்தனமே பனையாழிதன்குழலே
இனிமனதின்னமுதே என்மகளேகண்வளராய்
முத்துவடப்பூட்டி முதியதங்கதொட்டிலிட்டு
ஒத்துபடுக்கவைத்தேன் உத்தமியேகண்வளராய்
ஆலிலைமேல்துயிலுகின்ற ஆதிநாராயணர்க்கு
மாலைசகோதரியே மகளேநீகண்வளராய்
நாலுமறையோதுகின்ற நல்விழியேஎன்பகளே
பால்பழமுந்தனையுண்டு பஞ்சணையில்நீதூங்கு ராம்மா

போதவசனம்.

இவ்விதமாக மேனைம்மனும் பருவதராசனும் பார்வதியம்மனை சீராருமையினியாக வளர்த்து வருங்காலையில் பெவ்வன ஸ்ருபமாகி தாய்தந்தையைக் காண பார்வதி வருவது.

பார்வதி-சேபத்தியம்.

மந்திரமறையுருவா வந்தவளிவளென்ன
மையுவருசித்தள் மகிழ்ந்தகூற
சந்திரமுகமதில் மஞ்சளுங்குங்குமம்
சர்வவுயிர்க்கருணைவிழி மையுந்தீட்டி
இந்திரமேகம்போல் யிருகுழல்வகுத்துமே
பின்பமுடன்மல்லிகை முல்லைச்சூடி
அந்திரந்தன்னிலேபாருமே இவளுக்காக
அமையாது இப்படிக்கொத்தமாது.

கரு-இந்தருணம்பிந்த வடிவானமாது
யிவ்வுயிருமவ்வுயிரு மானசாது
முத்தமரைமந்திரமோ உருவானதோது
முக்கியமாய்பார்வதியும் வாறாள்ஒது

தரு.

வந்தாளிதோபார்வதியும் சுந்தரமாக
கொந்தல்குழல்தாதியரும் கூடவேயுக
திங்கள்வதனசிலை நாவில்திலர்தமின்னவே
எங்குமிவள்கிணையில்லை யென்றபன்னவே
உலகில்சீவகோடிக்கிவள் உயிருமானவள்
விலகில்சமையந்தனக்கு மிவள்விபரமானவள்
பாலன்துரைசாமிபாடும் புடல்கொண்டவள்
காலுமறைதன்னிலிவள் கடன்மிண்டவள்-வந்தா



வேறு-தரு.

மலைபிரையன்தபத்தால்வந்த மங்கையெனும்பார்வதியாள்
கலைமறையின்முடிவிலாடும கன்னியும்வந்தாள்
பருவதராசன்மேனையாள் பண்ணியதபத்தால்வந்த
கருவதமுடையமாது கன்னியும்வாறாள்
மங்கையவதனந்தன்ன பாலசுந்தரியாளென்ன
கங்கையைதரித்தோனை கன்னியும்வந்தாள்
சோலைதனைப்பழிக்கும வேலைவிழியைக்கண்டாள்
மேலையன்புசொல்லியமாது மெல்லியும்வந்தாள்
பாலுந்தேனும்மாங்கனியும் பருமொழிக்கிடில்லை
வேலுநாணும்விழியாளான மெல்லியும்வாறாள்
கங்குல்மங்குல்கொன்றைவண்டுகண்டு வாடுங்கூந்தலுடையாள்
எங்குமிணையில்லாமாது யீஸ்வரிவாறாள்
உலகமுழுபிருமுய்ய ஒருகும்பாய்கனத்தின்மீது
யிலகுங்கச்சைதான்துலங்க யீஸ்பரிவந்தாள்
ஜீவகோடிகளெல்லாம் திருவடியில்வந்துதஞ்ச
ஆவல்கொண்டருளுமாது அம்பணிவந்தாள்



பார்வதி-சருணதரு.

தந்தையேசருணம்உன்திருவடி எந்தையேசருணம்
தந்தையுன்பாதத்தில் தனையவள்பணிந்திட
பந்தம்வைத்தாண்டிடும் பைங்கிளிமகிழ்ந்திட

பருவதன்.

அம்மணிவாழி அருமைசெல்வசன்மணிவாழி
அம்மணியெங்கள் கலியாத்தவேகீயர்தாய்
பெண்மணிமாருத பேரின்பமுத்தர்தாய்

பார்வதி.

அன்னையேசருணம்வுன்பாதத்தில் என்னையாள்தருணம்
அன்னபுன்னம்பணிக்தேன் ஆதரியன்புடன்
என்னைகாத்தாண்டிடும் எப்போதும்பின்புடன்

மேனள்.

மலர்முகவதிபேகுலத்துக்கு மங்கையேயுதியே
அவர்வதியுன்ஞல் ஆருயபயெல்லாம்
விலகவேசெய்யவர்த மெல்விரல்மகன்வல்லாள்

பார்வதி.

கல்லவென்தந்தை ஒருசேதி சொல்லுவேன்கேள்தை
கல்லதவம்புரிய நான்வெண்ணங்கொண்டேனே
அல்லலகன்றிட அன்புகன்விண்டனே

பருவதன்.

இதால்லபுத்தி பிளமையார்கே புதமைசொல்பத்தி
பிறற்குள்ளேட்னக்காரு இப்படிவிண்டது
மதுமலர்யர்பர்ன மகளேகேண்டது

பார்வதி.

சருணமென்தாயே ஒருசேதி கருணைசெய்வாயே
தருணமல்லதாகும் தவத்திற்குபான்செல்ல
அருணமனம்போல அன்புகேப்சொல்ல

மேனள்.

தேனெனுமொழியே யிந்தசொல்லு பாலெனும்விழியே
தேனேஉனக்கான செப்தேனேவெருதவம்
மானேசிறுவயதாய் மபக்குரேனுனுவம்

பார்வதி-வேறுதரு.

யென்தந்தைதாயேயிது என்னுவார்த்தையோ
கேட்கள்சொன்ன கேர்ந்தியா
முந்திசொன்னவார்த்தை யிதுபிந்தபோகாது



பருவதன்.

போகாதென்றுநீயுஞ்சொன்னல் புத்திமாருதே
எந்தன்சித்தம் சோருதே
பாகாதபஞ்செவ்வதற்கு ஆகாதிப்போது

பார்வதி.

இப்போதபஞ்செய்வதற்கு எந்தன்தாயாரே
இக்குலங்தேன் சேயாளும்
ஒப்பியுந்தன்வாயால்போக மெய்ப்பாசொல்லுவா

மேனள்.

சொல்லுமென்றாங்கள் சோதிக்காதேநீ
இப்போ வாதிக்காதேநீ
வல்லதபஞ்செய்யவயது யில்லைஉனக்குமே

பார்வதி.

உனக்குசித்தமயின்னம்வல்லையா ஓதந்தந்தையே
இதுபோதும் எந்தையே
எனக்குமனம்தபத்தைசெய்ய எண்ணிக்கொண்டேனே
திரம்கண்ணி விட்டேனே

பருவதன்.

விண்டுதபஞ்செய்யவென்றால் வேதையாகுதே
மனம் வாதையாகுதே
உண்டுஒன்றை பிரியஞ்செய்து ஊரிலிருப்பமா
இந்தபாரி லிருப்பமா

பார்வதி.

விருப்பமுள்ளதந்தைதாயே வேண்டிக்கொண்டேனே
தபம்தாண்டி கின்றேனே
வெருப்பமிலாபோகஎனக்கு விடையேதருவீர்
தவமடைய பெருவீர்

மேனள்.

பெருகுந்தவம்செய்துஉன்னை பெற்றுவளர்த்தோமே
தாங்கள்சித்தம் களித்தோமே
உருதவஞ்செய்தால்மேனி ஒருக்காதம்மணி
வெய்யல் பொருக்காதம்மணி

பார்வதி-சந்தார்த்தம்.

இந்தப்படிசொல்லசொல்ல தந்தைதாயே
யென்னையனுப்பமனதுவல்லை யினிகேள்யானும்
வந்தப்படியதுவாகும் தெரிந்துகொள்ளும்
வளர்கைலைவாழ்சிவனே யென்னைப்பார்த்து
சொந்தபடிமணமுடிக்க தபமேசெய்ய
சத்தயெண்ணம்பத்திக்கொண்டே னின்னம்வேறு
சிந்தைபடிக்கொள்வதில்லை யிதுவேசெட்டி

தரு-செல்லுவேன்வனத்தைநாடியே தபங்கள்செய்து
அல்லலகற்றத் தேடியே
பல்லுயிர்க்குயிரான பரமனை மணஞ்செய்ய
நல்லயெண்ணமுங்கொண்டேன் நடக்கவிடைதருவீர்

பருவதன்-சந்தார்த்தம்.

வண்டணிந்தகுழலியரே யெந்தன்தேவி
வளர்ந்தவந்தால்வந்தசெல்வி வரைந்ததெல்லாம்
கண்டேனிங்கேயினிபரமன் மருகனுவார்
கனாக்ணுமகிழ்வுகொண் டனுப்பிடாயே

மேனுள்-சந்தார்த்தம்.

கொண்டேனிந்தவெகு மகிழ்பிராணநாதா
குறைவிலாபரமன் மருகனாகவந்தால்
தொண்டனிந்துசெய்தபமும் நல்லதாச்சி.

தரு-சந்திரமகளேவாருமே மனதின்படி
தந்தேன்விடையும் பாருமே
சிந்தையில்சிவதவம் ளுந்துபுரிந்துவிள்ள
விந்தைநாதியுகல வேணதெல்லாங்கொள்ள

பார்வதி-தரு.

சந்தோஷம் வாருமெந்தன்தாதி
யென்தந்தைதாய்விடையளிக்க வந்தேனேயாதி
இந்தணியீசனவர்தன்னை யினியேத்தித்தபஞ்
செய்திட்டாலே சேர்த்திடுவார்நம்மை
தபத்திற்குள்ளபொருளெல்லாம் கொள்வீர்
தீயும்தட்டாமல் கொண்டுபெர்தன் கிட்டவாவிள்வீர்
பவத்தையொழிக்கும்பரமன்தன்னை நன்றாய்பாடுங்கடி
கூடுங்கடி பத்திவரும்சொன்னேன்



நடுநகர்தாண்டியிங்குவந்தோம் இனிநற்றவம்புரிய
வரணம் சித்தமதில்தந்தோம்
காடுதுடர்ந்துவிடக்கண்டோம் நாம்கருதிதபம்
செய்வதற்குஉருதியிகக் கொண்டோம்
குளிர்ந்தஜலக்குளத்தில்ஸ்தானம் செய்தோம்
ஆகாருழைத்துநீரிட்டுமந்திரம் தழைத்திடவேபெய்தோம்
தளிர்ந்தவில்லம்கொன்றைதும்பை கொய்வோம்-வெகு
தங்கிசிவபூசைதனை மங்களமாய்செய்வோம்-சந்தோஷ

கவி.

வெளியொளிவிளக்கா விண்மணிக்கொன்றை
வேலையிலே பூத்திடவமுதே
குளிரளிசுவையே கொழும்பசுந்தேனே
குறைவிலாமதுர செங்கரும்பே
எளியவள்விரும்பி செய்தபக்கருத்தே
யென்னிருதயத் தரும்சிவனே
தளிர்மலைக்கழலும் தந்தெனையாளும்
தங்குணகண்ணுள அம்மணியே.


பொதுவசனம்.

இவ்விதமாக பார்வதியம்மன் பரமனைக்குறித்து தபம்புரிய இப்பாலசுரர்செய்கின்ற இம்சைமுடியாமல் தேவர்கள் பரமனைத் தேடி வருகிறார்.

தேவேந்திரன்-கவி.

சங்கரர்போகந்தன்னை பிரளழித்திடுவேனென்று
அங்கஜன்போனசேதி அதுவென்றுந்தெரியவில்லை
இங்கனம்அசுரர்துன்பம் யினிபொறுக்காதென்று
வெங்கதிர்யேர்லயிந்திரன் வெளிப்பட்டுவருகின்றாரே.

தரு-யெத்திசைதேவரெல்லாம் சுத்திவந்தடிதாழ
இந்திரன்கொலுவதாகினார் தேவர்கள்சூழ
குந்தகமில்லாமல் யேகினார்
சுந்திருவர்கணாதர் மந்திரமறைமுனிவர்
கானகவாசிகள்வந்துசூழவே யெவருங்கண்டு
வானகவாசிக ளடிதாழவே
அரம்பையூர்வசிமாதர் நிரம்பநடனஞ்செய்து
அட்டியில்லாமல் சூழ்ந்துவருகவே
அமரர்தினம்கட்டியம் யெதிருகபெருகவே



| | |
|---|---|
| வேதியர்மறைபடி | வேண்டியாசிகள்கூறி |
| மெல்லியர்கவரி | வீசிவருகிறார் |
| தினமுந்தினம்தில்லைய | மலாமாரிசொரிகிறார் |
| மலைச்சிரசைபரிந்த | வச்சிரவாள்கைபிடித்து |
| மத்தஅப்ருவதத்தில்வருகிறார் | தொங்தோமென |
| கதித்தப்புளுவ் | கீர்த்திப்பெருகிறார்-பெத்திசை |

க வி.

மந்திரிமர்தலியேகேளாய் மாயலன்சுதனார்தன்னை
சுந்திரசிவனார்கிஷ்டை தலைக்கவேயெடுத்ததாலே;
வெந்தமேபோறுனென்று விபாமும்தெரிந்துமெந்தன்
சிந்தையும்வாடுதையோ நிவினைக்கென்னசெய்வேன்.

தேவேந்திரன்-தரு.

| | |
|---|---|
| என்னக்காலம்மென்னக்காலமோ | ஓதேவர்களே |
| இந்தகொடுமைக்கிஎன்னசெய்குவோம் | ஓதேவர்களே |
| பன்னகமணிபரமசிவனார் | ஓதேவர்களா |
| பஞ்சபாணனும்பஸ்பமானான் | ஓதேவர்களா |
| மென்கணவனார் மெங்கேயென்றுமே | ஓதேவர்களா |
| மேந்திழைமாதிவந்துகேட்டாலே | ஓதேவர்களா |
| மங்கைக்கென்ன பதிலுரைப்பது | ஓதேவர்களா |
| மாறுர்தயாம்வந்து தென்னசெய்வேன் | ஓதேவர்களா |



| | |
|---|---|
| பாவிமிதர்க்கேதான் பண்ணும்பாசத்தில் | ஓதேவர்களா |
| பத்திச்சாபம் சத்திக்கொண்டதோ | ஓதேவர்களா |
| ஆவிவாடுதே அசுரர் துன்பத்தால் | ஓதேவர்களா |
| ஆனால்யிந்த மிமிசைநீங்குமோ | ஓதேவர்களா |
| எதுதனைக்காலம் கஷ்டப்படுவது | ஓதேவர்களா |
| எப்போ அசுரர் இடுக்கம்நீங்குமோ | ஓதேவர்களா |
| கர்த்தனாரெப்போ கண்விழிப்பாரோ | ஓதேவர்களா |
| கஷ்டங்களெந்த காலம்நீங்குமோ | ஓதேவர்களா |

கா வி.

எந்தனிடபக்கமதில் பிரியாயிர்க்கும்
இன்பமந்திரிமாதலியே தேவரேகேள்
சந்ததமும்அசுரர்தன்னால் கஷ்டமானோம்
சகிக்கமுடியாது இதற்குமேலே
வந்ததெல்லாம்வாட்டு மிந்தபாமனாலே
வாய்விட்டுஅழுஞ்சுதன் பாலருந்துமல்ல
அந்தவிதந்தனையெண்ணி நாமெல்லோரும்
அபையமென்றுஒருமிக்க முறையேகொள்வோம்.

வசனம்.

வாருங்கள் தேவர்களே நாமனைவரும் அந்தசூரனால் மனது வாடி தவிக்கின்றபடியால் இன்னாளில் பரமசிவனிடம்சென்று முறையிடுவோம் வாருங்கள் தேவர்களே.

தேவேந்திரன்-தரு.

| | |
|---|---|
| | அபையம்அபையம் |
| சம்போசங்கரா | அபையம்அபையம் |
| சதுர்மறைதேவா | அபையம்அபையம் |
| அம்புலிசடையா | அபையம்அபையம் |
| ஆஸ்தைபுண்டவா | அபையம்அபையம் |
| சங்காருசிவ | அபையம்அபையம் |
| சத்திருளிருபனே | அபையம்அபையம் |
| புங்கருவணிசிவா | அபையம்அபையம் |
| புனல்சடைநாதனே | அபையம்அபையம் |
| பன்னகமணிசிவா | அபையம்அபையம் |
| பரமகுணநிதி | சிவனேபரனே |
| ஏழைகளுகுரல் | உனக்கபயம் |
| இருசெவியடைத்ததோ | சிவனேபரனே |
| சோரமுஅசுரனால் | அபையம்அபையம் |
| கொடுமையுப்தாளவியே | |

பொதுவசனம்.

இவ்விதமாக தேவர்கள் இந்திரன்முதல் அனைவரும் பரமனை வேண்டி முறையிட அந்தவேளையில் பரமசிவன் நிஷ்டைக் கலைந்து தேவர்கள்முன்பு வருகிறார்.

பரமசிவன்-கவி.

குண்டலத்துதேவர்களும் சித்தர்முத்தர்
  கூக்குரலோடு அபையமிடும் சத்தத்தாலே
மண்டலத்துவிண்டலத்து முள்ளவர்க்கு
  மண்டுவற்தனை நீக்க எழுந்துசிவனும்
வண்டலத்தகொன்றைதும்பை மதியினோடு
  வளர்சடையில் அணிந்தசுத்த வெண்ணீர் தன்னை
கொண்டலத்தமெய்யில் ருத்திருக்ஷாமின்ன
  கூறும்நிஷ்டைதேவர்முன்னே கொலுவதானர்

தரு-நிஷ்டைக்கலைந்து  யெழுந்தார்-யெங்கும்
திகைத்தசிவன்தலை  தனிலுறைசெய்யும் நிஷ்டை
கஷ்டம்தேவர்கள்  நெடுங்காலம்அசுரராலே
பட்டதுன்பத்தையெண்ணி  பரமன்களித்துமேபார்க்க
திருவெண்ணொக்க  பயங்களெல்லாந்தீர்க்க
அசுரகுடிபோக்க  கருணையுடன்
ஆலமடக்கிமுன்பு  ஞாலம்யெத்தவிதமா
மாலும்அயனும்  தேவர்சாலன்
கார்த்தபதமா  குளிர்பெருகும்
கஞ்சமலர்காத்தால்  அஞ்சலென்றமத்தியே
பஞ்சமலர்முகத்தால்  சஞ்சலமகற்றியே
சு-பத்தியுடன்  சித்தமுரா
  மெத்தவரும்  இத்தருணம்-நிஷ்டை
காமவின்னை  பற்றிமறந்து-பவ
சருவுருவில்லாமல்  நிலைவுருவாக
நாமரூபத்தைபுந்தாந்து  பூபன்மைந்தனால்வரும்
போதமுறைதுறைக்கும்  க்ஷேமமுலகப்உயிர்
செனிக்கவநாள்  நிறைந்த
சித்தர்இவரோயரிசுத்தர்  வெல்லாஜீவற்றும்
அதிமுத்தர்அன்பருள்ளத்தில்  பத்தர்தனிசூதலா
ஆதிமறைமுடிவில்  சோதியுடையரூபன்
வாதிடனம்செய்யும்  வியாதியுடையதாபன இந்தபடிக்கு
சு-வன்னல்சிவன்பெற  உள்ளவோரன்திரம்
  கொள்ளைகொள்ளையென  துள்ளிசொல்தோத்திரம்-நிஷ்டை



பரமசிவன்-கவி.

எந்தனிடஅரிகிருக்கும் பிர்மபாலர்
  யெழில்பெருகும்நந்தி நாரதரோசேனும்
இந்தஉலகுயிரனைத்தும் யோகமாற்றி
  யிணையில்லாபோகமின்பகாலிலாழ்த்தி
சந்ததமும்செழித்துவளர் தோங்கியெண்ணம்
  தான்கொண்டகலைமதியும் வெள்ளிபீடம்
தொந்தரவைதேவருக்கு அகற்றிவைக்க
  அந்திரனும்கருணையுடன் இருந்திட்டேனே.

வசனம்.

வாருங்கள் நந்திநாரதரே இன்றுநாம் நிஷ்டைகலைந்து எழுந்து இந்த உலகமுழுதும் சமதுபாதத்தில் ஆழ்த்தி இந்த வெள்ளிமலை பீடத்தில் அமர்ந்திருப்போமய்யா நந்தியே.

தேவேந்திரன்-கவி.

நச்சரவம்பூண்டசிவன் யோகமாற்றி
  நானிலமும்வானிலமும் வானோர்க்கெல்லாம்
அச்சமதனைநீக்கக் கருணைக்கொண்டு
  அமர்ந்திட்டார்ஆசனத்தில் அமரர்பாக்கியம்
வச்சிரவாள்படையுடைய இந்திரனான்
  வறந்திட்டேன்வானவரே சமையமாகும்
மெச்சரவம்புலிபோர்த்தும் பாதந்தன்னை
  மிகவணங்கினேன்குறையை விளம்புவீரே

தரு-தேவதேவதேவதேவ  தேவாவந்தனம்
  வந்தனம்
எங்களைகாவா
பாவலர்நாவலர்யாவரும்போற்றிடும்  பாதம்வந்தனம்
சருணம்சருணம்சருணம்சருணம்  சருணம்தந்தனம்
  வந்தனம்
இந்ததருணம்
கருணைசெய்வதுகிரனை  நிரணகர்த்தர்யெந்தனை
அன்னதயவில்அதிதயவா  அன்புகொண்டவா
  கொண்டவா
கனிந்தின்பம்
உன்னையல்லால்யெங்களைகாக்க  ஒருவரில்லையே
போதும்போதும்போதும்போதும்  போதும்பட்டது
  எங்களை
சூரனால்பட்டது
பாதுகாக்கவேணுமையா  இவ்வேளைக்கெட்டுது-தேவ

### தேவேந்திரன்-கவி.

பண்டுமழுதிரிசூலம் பிடியுடக்கை
பாங்குடனே திருமேனி தன்னில்பூதி
கொண்டணிந்தபரமனே ருத்திராக்ஷ
கோலமதைகுறிப்புடனே உள்ளத்திலெண்ணி
அண்டர்கோனிந்திரனு மற்றோரெல்லாம்
அடிபணிந்தோம்ஆதரிப்பீர் பரனே அய்யா
துணடத்தனை அசுரர்தனை பயமொழித்து
தொல்லையினிலெங்களுயிர் விலக்கச்செய்வீர்.

### வசனம்.

அரகரா மகாமான்மழு திரிசூலம் அணிந்த பரமக்கடவுளே தேவரீர் பாதங்களில் தெண்டம் சமர்ப்பித்தோம் இவ்வேளை அந்த அன்னனாகிய ராக்ஷதர்களை யொழித்து எங்கள்குறையை அகற்றிவைக்கும்படி தங்கள் பாதபத்ம கமலங்களுக்கு சரணம் சரணமையா சுவாமி பரமனே.

### பரமசிவன்-தரு

ஏதுக்குயென்னிடபாதமேகதியென்றுவந்தீர் இந்திரனேயும்
எப்படி இங்கனம்தப்பிதலந்தனம்தந்தீர் பேகியேமுன்பு
சு-வாதுக்கும்வம்புக்கும் தோதுக்கும்தீதுக்கும்
பாதுக்கும்பிர்ம சாதுவுனக்கிருக்க-ஏதுக்.

### தேவேந்திரன்-தரு

இப்படிசொன்னால்நானெப்படிஉய்வது அய்யாதயவுசெய்யும்
பின்னமும்துன்பத்தில்தள்ளவே செய்யாதேமெய்யாயீசனேநீயும்
சு-அப்பணிநாதா தப்பிதம்தப்பிதம்
இப்போஉங்களுயிர் ஒப்பிடேன்பொர்ப்பதம்-இப்படி

### பரமசிவன்-தரு.

எத்தனைசொன்னாலும் சித்தமுங்கள்மீதுவருமா நீங்கள்செய்ததை
என்னஎன்னமதைபுண்ணாகுதேயிது அருமா எல்லாம்தெரியும்
சு-பித்தன்வெறியனென்று கத்திதர்க்கமோடு
ஒத்துதேவர்முதல் நத்திரேவனோடு-எத்த

### தேவேந்திரன்-தரு.

அப்படிசொல்லிநீரடித்தாலும் அணைத்தாலும்நீரேகதிவேறில்லை
இப்படிசொன்னாலேஅன்னைதந்தையர் பரேஇனியாகிலும்
சு-தடுத்திடரூரனை பொடிபொடியாக்கியே
மடித்துஅவர்கள்மீது கடித்திடகண்பாரும்



### பரமசிவன்-கவி.

போவதுபிழைகளெல்லாம் பொருத்தேனினிமேலென்றால்
ஆவதுஆகுமிங்கே அங்கஜன்வருவதற்கு
ஈவதுசொன்னதாரு எனக்கதையுரைத்தீரானால்
சாவதுஉங்கட்கில்லா சங்கரன்காப்பேன்தானே.

### வசனம்.

கேளும் தேவராஜனே நீங்கள் செய்தபிழையை பொருத்தேன் இன்று அந்தமன்மதனை நான் கொன்றுவிட்டேனென்று உங்களுக்குச் சொன்னதார் அதை விபரமாக சொன்னால் கஷ்டத்தை தீர்த்துவிடுகிறேன் தேவர்களே.

### தேவேந்திரன்-கவி.

பன்னகமணிந்தயீசா பதமதைத்துதித்துப்போற்ற
நன்றாகவூர்தியிந்திரன் நானென்றுமரியேன்சுவாமி
இன்னமாவிஷ்ணுவாலே தெரிந்திட்டோம்சேதிதன்னை
முன்னாகஉனக்குரைத்தோம் முளரிதான்பணிந்திட்டேனே.

### வசனம்.

கேளுமையா சுவாமி பரமக்கடவுளே அந்தக்காமனை எரித்த சங்கதி அந்தமாலாகிய மகாவிஷ்ணுவால் தெரிந்தோமையா சுவாமி பரமசிவனே.

### பரமசிவன்-விருத்தம்.

சரிசரியிந்திரபூபா சந்தேகமானேன்புன்னால்
உரியதுதெரிந்துக்கொண்டேன் யோகத்தைக்கலைத்தசேதி
அறியவேவேணுமிப்போ அவசரமாகநீங்கள்
கரியமால்மாயன்தன்னைக் கடுகெனவரச்செய்வீரே.

### வசனம்.

கேளும் இந்திரா நீசொல்லிய சேதியினால் சந்தேகமாகினேன் இப்பவும் அந்தகண்ணனை நான் அழைத்தேனென்று சீக்கிரம் கொண்டுவாருமப்பா நந்திகாவலனே.

### விஷ்ணு-கவி.

அண்டாண்டமுண்டமிழ்ந்த ஆதிமாயன்
அலைகடலில்பள்ளிகொண் டமர்ந்தநாதன்
மூண்டகமாமலர்மாது மார்பநேயன்
மும்மூர்த்திதிருவுருவா மூலவேதன்

தண்டமுடன்சங்காழி வில்லும்வாளும்
நடகரத்தில்தான் துலங்க கெருடனேறி
தொண்டர்பணிபரமன்தனைக் காணவேண்டி
துளபமணிமாயவரும் வருகின்றாரே.



தரு-ஆதிமூலமானசோதிவர்தார் நாராயணமூர்த்தி
கோதிலாகருணைதனை தந்தார்
பாதிமதியணிந்த பரமன்தன்னையேகாண
சேதியென்னவென்று தெரிந்துக்கொள்ளவேண
சரு-திருவருள் தந்திடும் குருவருளீசனை
உருவதுகாணவே வருவரும்தேசனார்-ஆதிமூல

மாலைத்துளபமார்பின்மின்ன வேடிக்கையாக
காலந்தாத்தின மணிதுன்ன
சோலைக்குயில்மொழியாள் தோகைதிருமாதுடன்
வேலைதன்னில்துயல் வெகுவிதமானதுடன்
சரு-விண்ணவர்தனக்கு கண்ணவரும்
திண்ணமாசிவனுமே நண்ணவருகும்-ஆதிமூல

உந்தியில்வேதனை தந்தமூர்த்தி-புலகளிக்க
சிந்தைமிகக் களிந்தநேர்த்தி
அந்திரத்தோர்களும் ஆதிமூலமென்று
கந்தரமுகுந்தரவென்று காவலரடிதொழ
சரு-கத்தியபாவரும் பெற்றிமெதனை
பத்தர்கள்தமக்கு வைத்திட்டேன்சதனை-ஆதிமூல



குறத்திநகரில்வாழும் பாலன்வைத்திலிங்கம்
சோரும்தயத்தில் லங்கசிலன்
பிரியவன்னியகுலத்தில் பிறந்தருளியலோலன்
சிரத்தையாவிரப்பனும் குறித்தநாடகம்கேட்க
சரு-சிறுவனும்துரை சாமிபாடினேன்
திறமையாய்மாயன் திருவடிதேடினேன்-ஆதிமூல

விஷ்ணு-கவி.

கரியமால்மேகவண்ணன் காரிழைலட்சுமியாளோடு
பிரியமேமனதில்கொண்டு பேநள்ளதம்பிசூழ
அரியவேபரமன்தன்னை ஆசையாகாணவேண்டி
ஒருமையாயிருக்குங்காலை உத்தமன்மகிழ்ந்திட்டாரே.

தேவேந்திரன்-ஐம்பை-தரு.

பாற்கடலில்பள்ளிகொண்ட பச்சைநிறதிருமாலே
நார்க்கவேண்டும்பெங்களை கழலிணைகசேருணம்

விஷ்ணு.

பெற்றனிடதாள்பணிந்த இந்திரனேவாழியப்பா
இந்தனிந்தயீசனும்மை யிடேத்திக்கார்ப்பார்

தேவேந்திரன்.

யீசனம்மைகாப்பதற்கு பின்னம்மனம்வல்லையப்பா
தேசனேஎனையுயிர்பிழைக்க தேடவேண்டும்திருமாலே

விஷ்ணு.

சங்காரர்செய்யும்கிஷ்டைதான் நிலைக்கவேணுமென்று
அக்ஜனை அனுப்பினேமே அந்தசேதிஎன்னசொல்லும்

தேவேந்திரன்-கவி.

சக்கரபாணிமாயா சங்கார்கோபங்கொண்டு
அக்கினிகண்திறந்த அங்கஜன் தனையெரித்து
மிக்கவேஎழுந்திருந்து மேன்மையாயுனையழைத்தார்
தக்கசேதிதானையா சாற்றினேன்சருணாந்தனே.

வசனம்.

கேளும் பகவானே அந்தமன்மதனை பரமன்தன் நெற்றிக்கண்ணால் எரித்துவிட்டு உன்னை அவரிடம் அழைத்தார் நாமனைவரும் போகலாம்.

விஷ்ணு-தரு.

பெருக்கவும்மையமைத்த பெம்மானுர்சேதிமெய்யா
இருக்கும்தேவன்தனக்கு யேதுக்தெரியாதையா

விஷ்ணு.

தெரியாதர்ம்செய்ய சேதிசிவவரிய
சரியாநீசொன்னதுண்டோ சாற்றமேயானரிய

தேவேந்திரன்.

சாத்தும்விஷ்டைக்கிலே தந்திரஞ்சொன்னது
தீர்த்துவந்தனைகேட்க தெரிவித்தேன்முன்னது

விஷ்ணு-கவி.

சிந்தனையொன்றரியா நீங்களும்வாழ்வியென்று
வைமந்தனையேவிவிட்டு மகாதேவன்முன்னேநீங்கள்
சிந்தனைச்சொன்னதாலே யெல்லோருங்கூட்டமாக
சிந்தனைசெய்துக்கொண்டு சிவன்முன்புசெல்வோம்வாரீர்.

வசனம்.

வாருங்கள் தேவர்களே நமதுகுமாரனுன்மன்மதனைஅந்தபரம சிவன்முன்னே போக சொல்லிவிட்டு தெரியாதென்றீரே இப்பவும் அந்த பரமன்முன்பு நாமனைவரும் செல்லுவோம் வாருங்கள் தேவர்களே.

விஷ்ணு-தரு.

வாருரிதோவைகுந்தவாசவர் வானவரும்ரிஷிஞானவரும்
இருகவேதேவர்குறைதீர சிவனருள்கொண்டுமேகவனமுடன்
மாலேந்தளபம்விசமார்பில் மங்கையிலட்சுமியிங்கிர்தமா
ஆலகாலசிவனடிப்போற்றியே அன்புடன்வாருரேகும்பலுடன்
ஆதிபரஞ்சோதிசிவாவென்று அஞ்சலிசெய்தாரேதஞ்சமென
பாதிமதியணிந்தசிவன்தன்னை பாதம்தொழுதாயோரத்துடன்
கண்டாரேகடவுளடியிணை கருத்தில்பயங்கொண்டுவருத்தமுடன்
கொண்டாரேகுரைகள் திருமென்று
கும்பிட்டுவிழுந்தாரே நம்பிக்கொண்டே

விஷ்ணு-கவி.

ஆலமதுதனையுண்ட அந்தாவித்தா
அம்பலவாணதேவா ஆதிசோதி
காலமதில்பட்டதன்பம் தனையொழித்தே
கண்ணாராலடியைக் கண்டபோது



ஓலமதுவிட்டுவந்த தேவர்துன்பம்
ஒழித்தருள்வாசிவசிவா சிவனேயென்று
ஞாலமதைதனையுண்ட மாயன்தானும்
நம்பியந்தேன்மலர்த்தாளை கும்பிட்டேனே.

வசனம்.

அரகரா மகாதேவா மைத்துனா இந்தேவர்களும்நானுமடமது தம் வந்தனம் செய்தோம் தேவா.

பரமசிவன்-தரு.

ஆசிர்வாதந்தந்தேன் அரியே
அரிவேன்வந்த சேதிதெரிய
தாசிப்போலுந்தன் தளுக்குகளெல்லாம்காட்டியே
பேசிப்புகன்றது பெருமையோமேட்டியோ

விஷ்ணு.

என்னகொடுமை செய்தேனுதா
இப்படிசொல்வது தோதா
பன்னகபணியனே பழிவீணுபோகுமீர்
பென்னகங்குன்றிட யேன்வழிதேடுதீர்.

பரமசிவன்.

பேதக்குயிவ்விடம் வந்தாய்மாயா
இப்போதுசெல்லுமே நீயேக
மாதுதிருலட்சுமி தங்கைமணவாளா
சோதியருகில்லாமல் சொல்லுங்குணவாளா

விஷ்ணு.

மானுமழுவேந்தன் கையாக
வன்னாலேசொல்கிறேன் மெய்யா
வானவர்களாலே வந்தனைப்புடேன்குறை
தினதயாபா திருமேனிதமுமை

பரமசிவன்.

சரியோ
நன்றாநீசொன்னது வெகுஅரியே
இதுஞாயந்தானோ
இன்றைக்கிருக்கும்புத்தி அன்றைக்கிருக்கவேணும்
அன்றறிந்தக்கணைஅவன் ஆதரிப்பான்காணும்

விஷ்ணு.

இத்தனையும் சொல்லலாமா
எங்கள்குறைபகற்றும் மாமா
பெற்றதந்தைதாயர் பிள்ளைபிழைபொருக்க
ஒத்துக்கொள்வார்போல உமக்குகனிறாக

பரமசிவன்.

நல்லார் திருக்குதிந்த ஞாயம்
நீநடக்கநடத்தை யிதமாயம்
பொல்லாதேவருடன் புகழுங்கீர்த்தியுந்தேட
பெல்லாருக்குமுனையே யெகினீர்தர்க்கனிடம்

விஷ்ணு.

பிடித்தப்பிடியாக யீசா
பிடிவாதஞ்செய்யாதே நேசா
அடித்ததுபோதுமினி அனைத்திடல்வேண்டுமே
நடித்தப்பாதம்வந்தனம் நல்லருள் தாண்டுமே

பரமசிவன்-கவி.

இன்பமுள்ளயெனக்கிசைந்த அத்தான்கேளீர்
இமையவரும்நீரும் எனைநீங்கலாக
வம்புசெய்யும்தர்க்கனிட யாகத்திற்கு
வந்திடவேநந்தியிட சாபத்தாலே
துன்பங்கொள்ளநேர்ந்ததுவே அசுரராலே
துலைந்துசுகப்பெருகொஞ்சம் நாள்போகட்டும்
அன்புகொள்ளும்அவரவர்கள் கர்மந்தன்னை
அப்படியில்லாமுடித்தது யெதிர்பார்த்துவாழ்வீர்.

வசனம்.

கேளும் அத்தானே நீயும் தேவர்களும் அந்தத் தர்க்கனிட யாகத்தில் என்னைமதியாமல் போனதால் அதுயிருக்கட்டும் அன்றுனில் நந்தியானவன் சொன்னசாபத்தால் நீங்கள் அசுரனாலே வதைப்படுகிறீர் இப்பவும் அந்தஅசுரனாகிய ராக்ஷதர்களை அருவருக்க இன்னம் கொஞ்சம் நாள்போகட்டும் நீங்கள் மனம்கொள்ளு மைத்துனா.

பொதுவசனம்.

இப்படியாக பரமனும் விஷ்ணுவும் வார்த்தையாடிக் கொண்டிருக்க இப்பால் தனது நாயகன் மன்மதன் மடிந்த சேதியறிந்து துயரத்தோடே பரமனைத்தேடி ரதியம்மன்வருவது.



இரதி-கவி.

துயல்தாங்கிமாது துக்கசாகரத்திலேடு
கயல்விழிநீர்கள்சிந்த கண்ணீருந்ததும்பிக்கொண்டு
மயலன்னசாயல்நல்லாள் மணவாளன்மடிந்திருக்க
நயகுணவதனரூபி நங்கையாள்ரதியும்வாறாள்.

தரு.

மன்னவன்மடிந்தசேதி மங்கையாளறியநீதி
அன்னிதம்அரனைத்தேடி அருவைர்திபும்ஓடி
சரு-அங்கமும்வாடியே சங்கரன்தன்னையே
கங்குலடைந்தாற்போல் நைதயனுமுன்னையே-மன்ன

குலுங்ககடையும்விட்டு கூந்தல்அலையகெட்டு
கலங்கிமனமுங்கெட்டு கன்னிவாருள்முன்னிட்டு
சரு-காரணமரிய பூரணந்தெரிய
சிரணிநடையாள் தெருவையடைரிய-மன்ன

ஆசபாசமும்விட்டேன் அருமைமன்னனால்கெட்டேன்
தேசம்புகழுபதொட்டேன் நிறுங்குலையமாட்டேன்
சரு-செம்புகழ்பரமனை அகமகிழ்காண
வரையதாமனமது யின்பமுந்தோண-மன்ன

ஆலமுண்டருளீசன் அரன்செய்தகுதந்தானே
பாலன்துரைசாமியால் படும்விதியுந்தானே
சரு-பாரினில்யெனைப்போல் கெவோருமேடோ
கோரியவிதமும் தடுப்பதுமுண்டோ-மன்ன

கவி.

அய்யய்யோயென்னசெய்வேன் அங்கமுங்குன்றிவாடி
மெய்யினில்பதறகொஞ்சம் வேந்தனுமடிந்திருக்க
குய்யோவென்றலரிவாடி கும்பலாநாதன்தம்மை
செய்யாதகாரியங்கள் செய்தனரென்னசெய்வேன்.

புலம்பல்-தரு.

அய்யய்யோநானென்னசெய்வேன் ஆறுதயாருமையோ
நையுதென்தன்உடல்பதரி நான்பாவியும்வாடுரேனே
என்னைப்போல்பெண்களெல்லாம் யெகபோகமாகவாழ்க
அன்னிதமாயெனக்குயிர்த அவதிவந்துநேர்ந்ததையோ
பருவநல்லயதனிலே பத்தாவைப்பரிகொடுத்தேன்
தருகியேமனதுவாடி கவலைப்பெரிதாகுதையோ

பூக்கும்பிராயத்திலே பிஞ்சிலங்குங்காலையிலே
காக்குமெந்தன் கணவன்தன்னை கன்னியாள்பறிகொடுத்தேன்
மஞ்சள்பொட்டுதானிழந்தேன் மாலைமணந்தானிழந்தேன்
பஞ்சவர்ணவளையல்தன்னை பாவையரும்கழட்டலாமோ
கணவனார்தானிறந்தால் கன்னியர்க்கழகுமுண்டோ
மணவன்தன்னையானிழந்து மயங்கிமனம்வாடலானேன்
அரசாணிசாக்ஷியாக ஆணழகன்கட்டுந்தாலி
வரிசையுடன்யானெடுக்க வந்ததைதபோ இக்காலம்
பாவிதேவர்தங்களாலே பஞ்சபாணன்தனையிழந்தேன்
ஆவிவாட்டஎந்தனுக்கு ஆருதயருகுந்தபேர்
விண்ணுலகில்வாழும்நீங்கள் வேண்டுவைபோகமெல்லாம்
மண்ணில்மடிந்தவுங்கள் மங்கைகாண்பார்ப்பதெப்போ

இரதி-கவி.

சண்டாளகுலக்காரு காசக்காலா
சங்கையிலாதேவர்களே என்போலுங்கள்
பெண்டாளுமெனைப்போல பாவியாகி
பெருமைகுலைந்திட கண்ணாற்பார்ப்பேனோதான்
வண்டாருமலர்க்கணையால் மாரன்தன்னை
வல்லிமிகுந்தலங்கோல மாகயிங்கு
கொண்டாளன்இல்லாமல் தவிக்கலாகி
கொம்பனையாள்மாயன் பதங்கண்ணுற்றேனே.

இரதி-தரு.

ஆதிநாராணசோதிமாயவரே அருவையாளுமே
அடியிணை தன்னில்படி பவிழுந்தேன் ஆரையாகவே

விஷ்ணு

பாதம்பணிந்தமாதரதியே பக்ஷமாகவே
பாருலகினில்பெரும்பெற்று நீபோவைவாழ்குவாய்

இரதி.

என்ன்வாழ்வுமன்னன்மாண்டபின் எந்தன்மாமாவே
மெய்தன்மனதனோந்தவாடுதே என்னசெய்குவேன்

விஷ்ணு.

எப்படிமதன்இப்போமாண்டது எனக்குதெரியாதே
வன்னமாமகன்தன்னைமடித்தது இங்குவந்தாயே.



இரதி-கவி.

இதுவென்னபொங்குமக்கு இமையவர்நீருமெந்தன்
புதுமதன்மணவன்தன்னை போக்கியேயுபிரைமாய்த்து
அதுவிதந்தெரியாபோலே அருவையாள்எந்தன்முன்னே
குதுகுலங்கொண்டிருந்த கொடுமைக்கியென்னசெய்வேன்.

வசனம்.

அய்யய்யோ மாமாவே தேவரீரும் தேவர்களும் கூடி என்னுப கனை கொன்றுவிட்டு என்னிடம் இப்படிப்பட்ட புதுமை சொல்ல வந்தீர் இதற்குமந்தரூ சொல்லுமாமாவே.



விஷ்ணு-கவி.

மங்கையேரதியேஎந்தன் மருமகளானவல்லி
எங்கேயுன்கணவனம்மா யெவனாலேமடிந்தவிட்டான்
இங்கனம்வந்துநீயும் எந்தன்மேல்பழியுமிட்டாய்
சங்கதிஎன்றதாக சாற்றுவாயரிபந்தானே.

வசனம்.

கேளாய் ரதியே நீசொல்வது நீதியல்ல உன்கணவனை யார்கொ ன்றுவிட்டார் யென்மேல் பழியிடாமல் நன்றாய்த் தெரியசொல்லு மருமகளே.

இரதி-தரு.

மாயக்கள்ளமாமா இந்தஞாயம்பேசாதேநீரும்
ஞாயம் பேசாதே
மாளச்செய்தீர்யெல்லாங்கூடி காந்தன்தன்னையே

விஷ்ணு.

ஆள்ன்மடிந்தசேதி காணுந்தெரியேனே
அம்மாகாணுந் தெரியேனே
ஆருலேமடிந்தானம்மா நேருச்சொல்லுவாய்

இரதி.

நேருகவேயீசனிஷ்டை யேருதழிக்கவே
மாமா யேருதழிக்கவே
மித்தனையாகணவன்தன்னை முந்திவிடுத்தீரே

விஷ்ணு.

முந்திசிவன்தன்னாலென்ன குந்தகமம்மா
பெண்ணே குந்தகமம்மா
முக்கியுமாசொல்லிடுவாய் அக்கரையாக

இரதி.

அக்கினிகண்திறந்து திக்கென்றெரிய
மாமா திக்கென்றெரிய
அங்கஜனைமாளச்செய்தார் சங்கரனும்

விஷ்ணு.

சங்கரனுமதன்மாண்டால் எங்கள்பாவமா
அம்மா யெங்கள்பாவமா
சாதனையாஇங்குவந்து ஓதலாகுமோ

இரதி.

ஓதியெந்தன்தந்தைதன்னை சூதினையாக
மாமா சூதினையாக
உளவுசொல்லிஇங்குநின்றீர் கள்வன்போலவே

விஷ்ணு-கவி.

அம்மாமருமகளேகேளும் அழுதமேதவித்தாலென்ன
எம்மாலேயாவதென்ன இன்னமோர்வார்த்தைக்கேளும்
பெம்மானரிடமேசென்று யென்குறைசொன்னாலீசன்
தம்மாலேகணவன்தனை தையலே அடையலாமே.



வசனம்.

வாரும் மருமகளாகிய இரதிமாதே யென்னிடத்தில் மனக்குறையைச் சொன்னால் ஆவது ஒன்றுமில்லை அத்தப்பரமனிடம்சென்று உன்குறையைச் சொன்னால் பின்னால் கெதியடையலாம் நீ அவரிடம் போயிவாருமம்மணி.

இரதி-தரு.

மங்கையும்ரதியுந்தானெழுந்து
மாயவர்தானுரைக்கவுந்த நங்கையும்வருவாள்கட்கலுற்றாள்
நாயந்தானென்றசொல்லி னடியிணைபோற்றியொருபிடியா
அப்புமதியணிந்தயீச வெழுப்பிநான்வருகிறேன்பாருமென்று
எப்படியானாலுந்தனை அவரில்லா
அங்கஜன்யென்கணவன் இருப்பேனோதான்
அரைநாழி தையலாள்கணவனைகேட்டிடவே
சங்கரன்தன்னருளால்இங்கு மெல்லடிபோற்றியேவல்லியாளும்
வேனையெரித்தசிவன் அருவைரதியாளும்வந்தனளே
ஆளனையான்பெருவேனென்று

இரதி-கொச்சகம்.

தண்மதியும்புலியுந்திகழ்சடையில் மிகதானணிந்து
கண்ணுதலேஉன்னிருதாள் கழலினையேயான்பணிந்தேன்
பெண்ணவள்தான்துயரங்கொண்டேன் பெருமையோதன்உங்களிட
எண்ணத்தைப்போல்முடித்தீர் யேந்திழையென்னசெய்வேன்.

வசனம்.

அய்யய்யோ அரகரா மகதேவா உங்கள் எண்ணம்போல் என் கணவனை கொன்றுவிட்டீரே இதுசரியாகுமாநானென்னசெய்வேன் பராபரவஸ்துவே.

பரமசிவன்-கொச்சகம்.

பச்சைப்பசுங்கிளியே பைங்கொடியேமாணிக்கமே
மிச்சையிளங்குயிலே யேந்திழையேநீவாழி
கொச்சைமொழிகுளரி கோதைமனங்கலங்கி
அச்சமுடன்பணிந்ததென்ன அரிவையரேநீயுரைப்பாய்

வசனம்.

வாராய் ரதிமாதே நீமகாசியா யிருப்பாய் நீஓடோடியும்வந்து பாதம்பணிந்தவிதம் சொல்லுமம்மா ரதிமாதே.



இரதி-தரு.

ஆலமுண்டகாலகாலனே சங்கரதேவனே
ஞாலம்விண்ட சீலசீலனே
வாலவயதுடைய வஞ்சிபடுத்துயரம்
நாலம்படைத்தழித்த சுவாமிதெரியாதேது-ஆல

பரமசிவன்.

கன்னிரதியாளே கண்மணிஇப்படியென்று
பன்னியுரைமேல் பெண்மணி
தன்னந்தனியதாக தையல்தவிப்பதேது
சொன்னபோதுடக்தன் துயரம்தவிப்பேன்சாது-கன்

இரதி.

காமன் மதன்தனை யெரித்தீரே சம்மதந்தாரு
தானும்என்னை குலையருத்தீரே
ஆளனில்லாதமாது அவனியிலிருந்துமென்ன
தாளேன் ஈனதுயரம் தவ்வைத்துகாருமுன்னாலே

பரமசிவன்.

பூண்டார்க்குழல்மாதாதியே உரைப்பேன்யானும்
மீண்டாளுவர வேணவிதியே
மாண்டார்வருவதுண்டோ வருத்தப்படுவதேது
வாண்டணிளிருந்துக்கொள்ளும் மங்கையேயிதுதாது



இரதி-கவி.

என்னமொழியுரைத்தீர் அய்யாமெய்ய
பென்கணவன்தனைசுட்டு கொளுத்திவிட்டு
இன்னமகிழ்கொண்டு யிருப்பதேது
யேந்திழையாள் தவித்திருக்க உம்மால்சொல்லும்
கன்னலேந்தும்சிலைமதனை தந்தாலாச்சி
கண்ணுதலேஉமக்கு பழியாகும்பேச்சி
சொன்னசொல்தவறாது யுந்தன்முன்னே
தோகையாள்உயிர்விடுவேன் தெரிந்துக்கொள்ளே.

வசனம்.

கேளுமையா சுவாமி பரமக்கடவுளே யென்னுதன் மடிந்தால் உன்மேல் பழியாகும் பென்னுதனை யெழுப்பித்தந்தாலாச்சுது இல்லாவிடில் உன்முன்னமே என்னுயிரை மாய்த்துக் கொள்ளுவேன் பாருமையா சுவாமி.

பரமசிவன்-கவி.

கலைமதியின் திருவதன முகத்தினாளே
கண்மணியேஎன்மகளே ரதியேகேளாய்
மலைமகளாம்பார்வதியை கலியாணஞ்செய்ய
மகதேவன்அவ்விடத்தில் வரும்போது
சிலைமதனையெழுப்பிக்கொண்டு வருவேனம்மா
தெரிவையேஇமையமலை நீயுஞ்சேர்ந்து
நிலைமனமும்குலையாமல் மணஞ்செய்வானை
நீயெண்ணியெதிர்பார்த்து யிருந்திடாயே.

வசனம்.

கேளாய் ரதிமாதே இன்னமும் பின்னால் மலையரசன்மகளாகிய பார்வதியை கலியாணஞ் செய்யப்போகிறேன் அந்த நாளில் உன் கணவனை எழுப்பித் தருகிறேன் நீயும் அவ்விடம்வந்துசேரும்போய் வருவாயம்மணி.

பொதுவசனம்.

இவ்விதமாக பரமசிவன் ரதிதேவிக்கு சொல்லிவிட்டு பார்வதி தபஞ்செய்யப்பட்ட தபச்சாரலுக்கு சன்னாசி வேடங்கொண்டு பரமன் வருகின்றார்.

பரமசன்னாசி-கவி.

மறைமுடிவில்நடனமிடும் பரமனாரும்
மங்கைதிமாதவட்டுக்கு கன்னியாலே
காமதனையெழுப்பித்தாரே யென்றுசொல்லி
கடிமணநாள்குறிப்பிட்டு இருக்கையிப்பால்
வரைமகளும்பார்வதியாள் மனதிலாரும்
மாதவதனைச்சோதிக்க மனதிலெண்ணி
திரையுருவந்தனைமாற்றி தவச்சார்புக்கு
நின்மலனும்சன்னாசி போலவாரார்.

தரு.

பரமன்சன்னாசி போலவாரார்
அந்தபார்வதியாளிருக்குமிடம் தேடியங்குநேராய்
கருமமலந்தா னகற்றுமீசன்
கல்லகலைமலைதனிலிரும் ஆனந்தசர்வேசன்
காமன்தனையெழுப்பித் தாரேயென்று
கன்னிரதியாள்தனக்கு சொன்னவாக்குநன்று
வாமவடிவங்கள் தன்னைமாற்றி
வாருரிதோசன்னாசிபோல் வள்ளல்சிவனேத்தி
தந்தைதாக்கன்தனை வெருத்துமாது
தனக்குதக்தவாக்குப்போல தவறுமலேசாது
இந்தனிர்தயிசன் ரூபம்வேறாய்
யேந்திழையாள்தபசிலைக்கு வாருரிதோசிறாய்
கடுந்தவத்தில் கருத்துடையாள்தன்னை
கடிமணஞ்செய்யவவன் கருத்தரியமுன்னே
கடுகெற்றிவிழியுடைய சுவாமி
தொண்டுதவச்சாலிலே வந்தடைந்தார்வேயி-பரமன்

பாமசன்னாசி-கவி.

கொந்தளக்குழலாள்தாதி கோதையேகேளோடி
தைத்தொடிதனக்காளந்த பார்வதிதன்பாலோடி
வந்தனரடியாரென்று வஞ்சிபேசகேளெல்லாம்
யிந்தநல்வதனியாக்கு இன்பமாயுரைசெய்வீரே.

வசனம்.

வாராய் தாதிகளே இன்று நீங்களோடி உங்களரசியாகிய பார்வதியைக் கண்டு பரமனடியார் வந்திருப்பதாகத்தெரிவித்து வாருங்கள் சேடிகளே.



பார்வதி-தரு

அந்தமுள்ளதாதியரே சுந்திரம்வாடி
அம்மா சுந்திரம்வாடி
அடியாரிங்குவந்தார்சொல்லும் அடியிடையாளே
எந்தயிடத்திலவரும் யிருக்கிறாரடி
அம்மா யிருக்கிறாரடி
யேந்திழையேசொல்லுங்கடி சாந்தமாக
அடியவரைகண்டாலெந்தன் மிடியுந்தீருமே
யெந்தன் மிடியுந்தீருமே
அன்னாள்செய்ததபமோயிங்கு சன்னாசியாவந்தார்
கண்டுக்கொண்டேனடியவரை இன்றுகண்டேனே
அம்மா இன்றுகண்டேனே
கருணைசெய்வார் கருணம்செய்தால்கன்னிமார்களே.

கவி.

வடிவுடையெந்தன்தாதி வனிதையேசர்வேகத்தில்
முடிவுடையபரமனார்க்கு முறைமுறைதொண்டுசெய்யும்
தடிவுடையடியவர்தன் தையல்நான்கண்டேனம்மா
கடிவுடைமலர்கள்கொண்டு கழலிணைப்பணிகுவோமே.

வசனம்.

வாராய் தாதிகளே நாம் மனதில் நினைத்தவண்ணம் போல் பரமனடியவர் வந்ததால் அவரிடபாதம்கண்டு துதிபுரிவோம்வாராய் தாதிமார்களே.

பார்வதி-தரு.

சிவனடியார்தமக்கு கவனமிகவேகொண்டு
திருவடிப்பூசைசெய்வோம் வாருங்கடி
கண்டிஜலமெடுத்து கொண்டுபதந்தலக்கி
சுறங்கூப்பிஅடியவள் மிகப்பணிந்தேன்
வம்புசெரியுங்கொன்றை தும்பைமலரெடுத்து
வஞ்சியர்ச்சனைசெய்து அஞ்சலித்தேன்
அஞ்சாங்கமில்லாமல் பஞ்சாங்கநமஸ்காரம்
தோகையாள்பொன்னடிக்கிப் பணிந்தேனே
யெந்தன்குறையகற்றவந்த அடியவரே
இன்பமாவாழ்த்தி யாதந்திடீர்

வசனம்.

சருணம் சருணமகதேவரே தங்கள் பாதபத்ம கமலங்களுக்கு அடியாள் சாஷ்டாங்க பேராங்க கிரியாங்க பஞ்சாங்கமாக பரமர்க் கடியாள் வந்தனமையா சுவாமி.

பாமசன்னாசி-கவி.

சுத்தமாமயிலேயம்மா தோகையென்னருகில்வந்து
சித்தமாபணிந்ததாலே தெருவையேயென்றம்வாழி
உத்தமியுன்னூரும்பேரும் உன்தந்தைதாயின்பேரும்
வித்தமாதபத்தின்வண்மை நீயெனக்குரைசெய்வாயே.

வசனம்.

வாருய் பெண்மணியே நீ சுகமாகவாழி ஆனல் உன்தாய்தந் தை பெயரும் உன்பெயரும் சொல்வதுமன்றி நீயேதனல் இத்தபம் புரிகின்றாய் சொல்லுமம்மா அம்மணியே.

பார்வதி-தரு.

கமலபதம்பணிந்தேன்சுவாமி — யெந்தன்சுவாமி
கன்னியெந்தன் — குலமுரைப்பேன்
கருத்தக்கொள்வாய் — கேடி
தந்தைதாயார்மலையரயன் — மேனாள்தாயார்மேனாள்
தலத்தில்வந்தபார்வதிபேர் — சாத்தினேனேமானாள்
வெள்ளிமலையீசனவர்தன்னை — அவர்தன்னை
வேண்டியமணமுடிக்க — செய்தேன்தபமுன்னே
யீசன்வந்து — யென்னைமாலைசூட்டி
மாலை — சூட்டி
இட்டுயென்னைபோவாரோதான் — யின்பமிக்காடி-கமல

கவி.

இப்படியென்வரலாறு யெம்பாக்கேட்டீர்
விதசரியேயானுரைத்தேன் யினிமேலையா
மைப்படிக்தகன்னியாள் தபத்தின்முன்னே
மகதேவன்வந்து அருள்தந்தயென்னை
கைப்பிடித்துமணமாலை சூட்டுவாரோ
காரணந்தான் இன்னதென்று அரியேனையா
யெப்படியும்கருத்தைப்போல் நடக்குஞ்சுவாமி
இன்பமுடன்எந்தனுக்கு புகல்செய்வீரே.



வசனம்.

சருணம் சருணம் மகதேவரே யென்வரலாறை தங்களுக்குரை த்தேன் இனி நான்செயும் தபத்திற்கு அந்த பரமன்வந்து என்னை மணமாலை சூட்டுவாரோ அரியேன் தேவரீர் தெரிந்தவண்ணம் அடி யாளுக்கு தெரியச்சொல்லும் தேவா.





பாமசன்னாசி-தரு.

என்னமதிகள்கெட்டுதோ — உந்தனுக்கு
யேதுமதிகள் — கெட்டுதோ
பன்னாள்தவஞ்செய்தாலும் — பரமன்வருவதில்லை
இன்னாள்யுனக்குவரும் — எப்படிவருவார்தொல்லை-என்

பார்வதி.

இப்படிசொல்லவும் — ...போகுமோ
அடியாளுக்குயிதனாலே — ...பமாகுமோ
அப்பணிசிவனாரும் — அருள்வைமுன்வருவாரோ
மைப்படிகன்னிஎன்னை — ...மாலையிடுவாரோ-இப்

பாமசன்னாசி.

எண்ணமிக்கவேகொள்ளாதே — ...ஈசனவரும்
இங்கேவருவாரோ
கன்னுக்குயேத்தகல்ல — கணவன்தன்னைமே...
பெண்ணுக்குயிதமெத்த — பெருமையுண்டுகண்டாய்-வண்

பார்வதி.

கொண்டகருத்தசேருமோ ... யிப்படி நல்ல
கோதைஎன்னைமு ... ஆகுமோ
பண்டுதபத்தின்முன்னே ... பரமன்வருவிட்டாலும்
சென்றுதனத்தினூலும் ... சிவனிங்கேவிட்டாலும்-கொ

பரமசன்னசி-கலி.

வாடிவேலத்தமிகியும் வளர்தபர்தன்னைச்செய்தால்
ஆடியபர்தனீசர் அவரிங்கேவரவேமாட்டார்
நீடியபுலகத்தன்னில் கேருனபுருஷன்தன்னை
கூடியேசுகித்தாக்ன்றுப் கோதைநீவாழ்கலாமே.

வசனம்.

கேளும் பெண்மணி நீவாடிவதங்கி மனம்கருகி தருகி தபஞ்செய்தாலும் அந்தபரமன் இவ்விடம் வரப்போறதில்லே இத்தபத்தைவிட்டு இவ்வுலகில் என்னைப்போல் ஒருபுருஷனைப் பார்த்துவிவாகஞ்செய்தால் சிலகாலம் உலகில் வாழ்ந்திருக்கலாம் பெண்மணி.

பார்வதி-தரு.

சன்னசிகிழவனுரே சொன்னது
பேர்தும் ... போதும்
யென்னிடம்விட்டு ... நீயும்
யெழுந்தட்டது ... போமோ

பரமசன்னசி.

கட்டதுபோவென்றல் மாதே
நான்சொன்ன சொல்பிசகா
திடமாக ஒருவனை நீ
திருமணஞ் செய்துக்கொள்ளும்

பார்வதி.

கொள்ளம் பாமனுண்டு
குத்திசஞ்சொல்ல வேண்டாம்
தள்ளாக்கிழவனுரே தையலாள்
யான் பொறுக்கேன்



பிரமசன்னசி.

பெருத்தமர் யானுஞ்சொன்ன
பெர்க்கொடி எத்தனந்தி
விருத்தப் பட்டலர்கும
விரமாட்டார் சிவனிங்கே

பார்வதி.

இங்கேசிவனுர் வந்து
என்னைக்கட்டிக் கொள்வாரே
பங்கம்என்னுல் படிவர
மத்ஷ்டம்சொல்லாதே பித்தா

பரமசன்னசி

பித்தன்வெரியன் சிவன்
பெருமையெண்ணிக் கொள்ளாதே
உத்தமியுன்னைப் பார்த்து
உருகுதேயென்ற நெஞ்சகம்

பார்வதி.

நெஞ்சம் பதருதம்மா
கேரிழை பிங்குவாடி
வஞ்சக் கிழவன்வந்த
வழிபோக சொல்லுங்கடி

பரமசன்னசி.

கடிமணஞ் செய்யஉன்னை
கன்னிகா னிற்குவந்தேன்
பிடிவாதஞ் செய்யாதே
பெண்ணேயென் கிட்டவாரும்

பார்வதி-வேறு-தரு

ஓசிபோபோபோகி யென்றிருந்தேன்
திருட்டுத்தனமாயேசரு இங்குருட்டுத்தனமாய்சரும்
ஓசிபோபோபோகி யென்றிருந்தேன்
முந்திவிட்டதேயிங்கே முண்டுத்தனமதாக
பேச்சிப்பேசப்படாது யேனதயாள்முன் பாத-சிபோ

பரமசன்னாசி.

தோதஇப்போது விருவருமிக்கனம்
சுகமாக கூடிடலாம்கூடி
மகிழ்விளையாடிடலாம் தோதுஇப்போது
வாதுசன்பேசாதே வம்புகள்விள்ளாதே
மாதுநான்போவேனோ மனமதுகொள்ளுதே-தோ

பார்வதி.

நாநிலாடிதவறாகப் பேசுறான்
தள்ளியமர்ந்சுடி புத்திவிள்ளப்
படியுங்கடி தாதிலாடி
பேதிவன்வார்த்தையை இடக்காககொட்டுறான்
மாதிவன்சன்னாசி பனம்போல்நிட்டுறான்-தாதி

பரமசன்னாசி.

கல்லாசென்னாய் நங்கை
நான்போவேனோ நன்மாலைசூட்டாமல்
கல்லாசொன்னாய் நங்கை
கிளிதேன்மொழி காட்டிடாமல்
எல்லாநலமுண்டு என்னைக்கட்டிக்கொள்ளும்
வல்லாண்மைசொல்லாதே வஞ்சிவார்த்தைதள்ளும்-நல்

பார்வதி-கந்தார்த்தம்.

இன்பதன்பமற்ற சிவயோகியென்று
எண்ணிதிருவடிகமலந் தன்னில்யானும்
தும்பைகொன்றை அரும்புமலர்வில்வங்கொண்டு
தோகையாள்அர்ச்சித்துப் பணிந்துகின்றேன்
வம்புசெய்யும்கள்ள சன்னாசிநீயோ
வஞ்சிபெண்ணைகட்டிக்கொள்ள வார்த்தைசொன்னாய்
அன்புடையபெர்தாதி அருகில்வாடி.

தரு.

அடித்துப்பிடித்துத்தள்ளடி கள்ளனிவனை
துடித்தவார்த்தையாள் விள்ளடி
வடித்தம்பார்த்துமே யிந்தவஞ்சிமேலாசைகொண்டு
கடித்துகடித்தவன்தான் காணுபிவனுக்குப்பெண்டு-அடி



பரமசன்னாசி-கந்தார்த்தம்.

பெண்ணையிந்தபடிதள்ளி யடித்தமாதே
இருகாந்தான்றேகாதோ யின்னஞ்சேரு
வன்னகும்பஸ்தனமிரண்டும் பிரண்டுருண்டு
வலுதாங்காயோடி யிடைவாடுஞ்சொன்னேன்
அன்னநடைசோர்ந்தசைந்து திரேகம்வாடும்
அழகுகுன்றும்யான்பார்த்து தாளமாட்டேன்
இன்னம்பெண்ணை அடித்தாலும் உன்னைவிட்டு.

தரு.

பேர்திமைப் பிரியமாட்டேனே
கொண்டக் கருத்தை
சேர்ந்தபின் வாங்கமாட்டேனே
மார்தளிர்மேனியாளே மனம்போலவுனக்கேத்த
வாய்ந்தக்கணவன்யானே. வஞ்சியுன்முகம்பார்த்தேன்

பார்வதி-ஓரடிதரு.

துஷ்டா இப்படிசொல்லாதே

பரமன்.

இஷ்டங்கொண்டேன் செல்லாதே

பார்வதி.

இந்தவிடம் விட்டுநீங்குவாய்

பரமன்.

உந்தனைவிட்டு வேங்குவா

பார்வதி.

உன்னுயிர்மாய்ப்பேன் படுபாவி

பரமன்.

அன்னமேவருகிறேன் புனைந்தாவி

பார்வதி.

இங்கேயுனக்கு வருந்தன்பம்

பரமன்.

மங்கையேதருவாய் நீயின்பம்

பார்வதி. பாதகனே
பரமன். தோதுதானே
பார்வதி. நீதவரும்
பரமன். மாதுசேரும்

பார்வதி. கோதுகொண்டாய்
பரமன். வாதுகண்டாய்
பார்வதி. பேதிப்படி
பரமன். சோதிப்படி
பார்வதி. சீபெட்ட
பரமன். வாகிட்ட
பார்வதி. கெட்ட
பரமன். தொட்ட

பார்வதி-வேறு தரு.

இத்தனைபிடிவாதம் — பேதக்கு
இந்நேரிவந்தாயே — வாதக்கு
பித்தனோவெறியனோ — பேயனோவீணு
முத்தமிழ்ஞானமயிரென்னுல் — மூடிவுமேபிதகாண-இத்த

உன்னாலேயென்னுயிர் — போகட்டும்
இத்தடலகத்தில் — விண்பழியாகட்டும்
சின்னல்மொழிமாதே — யென்னைசேரிப்பேர்தே
அன்னமேயேன்வாதே — ஆருக்குமடுக்காதே-உன்

பார்வதி.

வேதநூல்கேட்டாய் — ட்டபோனி
இங்கு-இடக்காகபேசுறும் — மிகத்தானி
வேதகனேசோதி — பறாக்குயான்பாரி
வாதுகள்செய்யாதே — வழியேசெல்லுமீரி-வேத

பரமன்.

பரமனென்றெண்ணிக் — கொள்ளுவாய்
எனைப்பார்த்துபதிலொன்று — விள்ளுவாய்
அரவாபரணமும் — அப்புமதியுங்கொண்டு
திருசூலமான்மழு — இருக்கத்தில்பார்-பரம

பார்வதி-கவி.

வடிவுடைதிருமேனிமீதில்வெண்ணீர்
வாராவருத்திராக்ஷ கண்டமீலம்
பிடிவுடையகரமதிலே மாருமானும்
பிர்மசிரம்திரிசூலம் பட்டுர்தன்ன

கடிவுடையகொன்றைதும்பை சடையில்கெங்கை
சதிர்பிறையும்திருநேத்திரம் மெல்லாங்கண்டேன்
கொடிவுடையஅடிதுவள அடியில்வீழ்ந்தேன்
குற்றமெல்லாம்பொருத்துஎன்னை மணஞ்செய்வீரே.

வசனம்.

அரகரு சங்கரு மகதேவா சம்போ நான் தங்கள் திருவுருவத்தைக்கண்டு மனமகிழ்ந்தேன் அடியாள்செய்த குற்றத்தை மன்னித்து என்னைத் திருக்கலியாணஞ் செய்து போவீரையா சுவாமி.

பரமசிவன்-கவி.

அன்னநடையுடைய மடமானேகேளாய்
அருமையரேதர்க்கனிட மகளாய்வந்த
உன்னுடையதிரேகமதை மாற்றிப்பின்னால்
உலகமதில்மலையரசன் மகளாய்வந்தாய்
கன்னியுன்னைபெற்றெடுத்த தந்தைதாயார்
கருத்தியின்னவிதமென்று அரியேன்யானும்
இன்னில்த்தேர்சரிநிட்டவே அவர்க்குச்சேதி
யெடுத்துரைத்துமணமாலை சூட்டிடாயே.

கேளாய்பார்வதி முன் தக்ஷன் தர்க்கனிடம் பிறந்தவள் அதை மாற்றி மறுபடி மலையரசன்மகளாய் வந்தபடியால் ஆதியில் சொன்னபடி நான்வந்தேன் அல்லது இவ்வுலகறியவும் உமது தாய்தந்தையரியவும் தெரிவித்து திருக்கலியாணஞ் செய்து கொள்ளலாம் பார்வதி

மேனையிடம்-பார்வதி-தரு.

தாயேஉந்தன் தாளிணைக்கு — யான்பணிந்தேன்
சங்கரனார்பேச்சைசொன்னீர் — இங்கேவந்தாரு

மேனை.

புரசமானஎன்மகளே — பரமன்வல்லையே
பாரினில்சன்னுசியிங்கே — யாரோவந்தானே

பார்வதி.

வல்லையென்றுசொன்னதாயே — வந்தமனையிலே
வள்ளால்சிவன்பேச்சைசொல்ல — உள்ளவோதம்மா



மேனுள்.

உள்ளம்வாடிபசிக்குதென்று ஓடிவந்தமே
தெள்ளுமொழியானே பிச்சைத்தாருமென்றானே

பார்வதி-கவி.

பெருமைபென்தாயேகேளும் பிச்சைக்கிவர்தோரல்ல
ஒருமையாயெனக்குபேத்த உத்தமரிவரேயாகும்
திருமனை தன்னில்வந்த சிவன்வர்தனக்குபென்னை
வருமையுமொன்றில்லாமல் மணமதுமுடித்திடீரே.

வசனம்.

கேளாய் தாயே இதோ வந்திருக்கின்றவர் பரமனாகும் சிவனை குறித்து நான் இவ்வளவுகாலம் தபஞ்செய்தேன் பரமன் இவரேயாகும் இவருக்கு என்னை திருக்கலியாணஞ்செய்து கொடுத்திடுங்கள் தாய் தந்தைமார்களே,

மேனுள்-தரு.

பிச்சைக்கார ளுச்சே பாவி
அடிபொல்குதடி எந்தனவி
இச்சையாகதம் பிதாலம்செய்தோமே
லச்சைப்படலானேம் ர்ரசக்காரனலே



பரமன்.

வீண்பேச்சுபேசாதே அம்மா-என்னை
விட்டுவிடும்போரேன் அம்மா
வாண்பவர்கைப்பார்கள் சரிமையேபேசாதே
ஆண்பிள்ளையல்லவோ அதிகமாசோதே-வீண்

பார்வதி.

அம்மம்மாவிதனாய மர்குமா-எந்த
னண்டவர்தனைப்பேச போகுமா
செம்மானேந்துகின்ற சிவனையென் திட்டுறாய்
அம்மாநீவீண்வார்த்தை பேனுதான்கொட்டுறாய்-அம்

மேனுள்.

ஓடுகையிலெடுத்த ஆண்டி-யேபோ
உத்தமிஅவளை நீவேண்டி
யேடாகூடமாக யெண்டியிங்குவந்தான்
தாடாண்மைகாரன்போல் சரியாவார்த்தைபுந்தான்-ஒடு

பரமன்.

வந்தவழியேபோறேன் மாதேநீ
மதிப்பில்லாவார்த்தை பேசாதே
எந்தனாருதேசம் இருக்குமெ
பந்தமானதேவி பார்

பார்வதி.

தாய்சொல்லால் கோ
நீதயவானவார்த்தை
பேரியவரேனென்று பு
நயமில்லாவார்த்தை

மேனுள்-கந்தார்த்தம்.

உலகெலாம்பிச்சைவாங்கி உயிர்பிழைத்
நலமாகிவாழ்க்கைப்பட்டால் காட்டினி
குலஞ்சாதியொன்றுமில்லை குற்றமாதோஷ
னக்குயேற்ற.

தரு.

...ப்பிள்ளையாகுமோ — ...ரேசடி
...க்கா தேநேப்பிக்லா — ...மகனே நீயடி
...ர்ப்பிர்க்கைப்பாடி — ...யழிச்சாமணக்கால்
...பெற்பாயிவ்விடம்விட்டு — பேசசொல்லிமுன்னே-மாப்

பரமசிவன்-கத்தார்த்தம்.

சிலைபுருவதனமுள்ள சேயிழைபாளேகேளாய் ... உலைவாயின்மெழுகுபோல உன்தாயாருக்குச்சொல்லும் நிலைபெருமயிலே செய்ய சேரிழையாரேன்பின்னுல் மனைவிகவெருத்த பெண்ணே.

தரு.

மாசோரான்பேர்பிவாரேன — நடைசொல்லாதே
...ரேன் — ...பேராயிமாரேன்
...தன்தமபன் — திருமால்தனையழைப்பிக்கிறேன்
...தாயுந்தாபிதந்தைக்கு — சொல்லிமணமுடிக்கிறேன்

பார்வதி-வசனம்.

கேளும் ஜெகதீசா தேவரீர் மறந்துவிடாமல் என் தமையனுக்கும் என் தாய்தந்தைக்கும் தெருதக்சொல்லி என்னை திருமணமுடித்துக்கொள்ளவீர் பரமக்கடவுளே.

சருவினரு-விஷ்ணுதரு.

...யிலைமலை — மீதினிலேஅரியக்கிலை
...பத்தோலை — அனிக்கேரேன
...க்கைப்புலி — நேசமதா தீர்க்கக்கலி
...ம்பேற்ற — தனிக்கோனே-ஆதி

பரமசிவன்.

...லைடும் — மாதவாயுன்னுரை ...டும்
...சால்வேன் — தேனுந்திருமாலே
...வசியே — மணமுடிக்கவேகதியே
...திபோ... — செய்வாயே-வேத

விஷ்ணு.

...நடையா — பரமனேசொல்லுத்தடையா
...டையா — ...ருசேதி
...நசெல்ல தன்னைபெருவனசவிஷ்ணுமகல
...ல்ல — இதி...



விஷ்ணு-கவி.

வேற்றுமையில்லா அந்த விண்ணவர்தனக்குமேலாய் ...
சாற்றியதபத்தில்ஞானம் தான்செய்யும்முனிவேயா ...
நாற்றிசையுகைமெல்லாம் நற்கீர்த்திபோர்விளக்க ...
தாற்றியேஆசிர்வாதம் தந்தனன்யிருந்திடாயே.

வசனம்.

வாரும் வாருமப்பா கும்பமுனியே நீயென்றும்இந்தஉலகமெங்கும் கீர்த்தி விளக்கும்படி வாழ்ந்திருக்க உமக்கு ஆசீர்வாதந் தந்தேன் இப்படி வீற்றிருப்பாய் அகஸ்திய முனியே.



அகஸ்தியர்-தரு.

வாரும்வாரும்மேக — ...வண்ணு இங்கே
வந்ததயேதுசொல் — ...கண்ணு
பேரும்பெருமைபெத்த — மெய்மானையிப்போது
நேருஞ்சமையமேது — சேயமாசொல்தோது-வாரு

விஷ்ணு.

சொல்லவும்உந்தனுக்கு — வஞ்சமோ-முனிவேயு
சுருதியின்முனைகற்ற — தஞ்சமோ
நல்லதுஉன்னைத்தேடி — நானிப்போதுவந்தேன்
சல்லாபகுணமுள்ள — பாமனுல்மொழிதந்தேன்-சொல்

அகஸ்தியர்.

அமரர்கள் துயரம்போக ஆவதென்னமோ
விமலா யெனக்குசொல்லும் வேணதென்னமோ

பரமசிவன்.

சொல்லும்விதந்தன்னைக்கேளும் தோகைபார்வதி
சுருதிமணமுடித்தாலே திரும்சேர்வதி

அகஸ்தியர்.

பெற்றலேகலியாண முடிவதெப்படி
குற்றமில்லாமலே! கூறுமெய்ப்படி

பரமசிவன்.

இமயமலையரசன் தன்னைக்கேட்டு வாருமப்பனே
மணமுடிக்கவுடன்றுவின்று திருமெய்யனே

அகஸ்தியர்.

யெப்படிசென்றுபெண்ணைக் கேழ்ப்பதையனே
செப்பிடவேண்டும்நாதா மெய்ப்பகைசொல்லும்

பரமசிவன்.

சொல்லுமென்றகும்பமுனி அல்லலாகாதே
வல்லஅந்தத்திருமாலின் பின்னுக்போகவே

பரமசிவன்-வசனம்.

கேளும் கும்பமுனியே நீயும் யெனது மைத்துனரும் சென்று பிர்மாவைகூட்டி இமயமலைக்குச் சென்று திட்டஞ்செய்து பெண்ணை க்கேட்டு வாரும் முனிவனே.

விஷ்ணு-கவி.

அரனிடவார்த்தைப்போல அருமுனிவர்தாமிங்கு
பெருமையா அரசன்தன்னை பெண்ணைனுக்தங்கையாமே
ஒருமையா மணமுடிக்க உண்மையுமனதில்கொண்டேன்
மருமொழியில்லாமல்தான் மாமுனிவர்திடாயே.

வசனம்.

வாரும் கும்பமுனியே அந்த பரமசிவன் வார்த்தைப்படிக்கு இமையகிரி பர்வத சாரலுக்குச்சென்று பரமசிவனுக்கு பெண் தன்னைக்கேட்டு கைலைகிரிக்கி வந்து மணமுடிக்க வருவோம் வாருமப்பா அகஸ்தியனே.





85093

பரமசிவன்.

அன்புமிகுந்திருமாலே கும்பமுனிபின்னாலே
உன்பற்கள்தன்முன்னாலே நடப்பீரே
அருமையர்தபார்வதிக்கு திருமணஞ்செய்யகான்குறித்து
அவனியமிசு பதிக்கிவருவாயே-அன்

விஷ்ணு-கவி.

சித்தமாசிவனார்வார்த்தை செவியினில்கேட்டுமாயன்
பக்தியாகட்கவிப்பால் பைங்கிளில் சுமியாளோடு
வெத்தியாகிதேமோத வெகுவிதம்பணிசெய்தான்
இதவுதித்தஅகஸ்தியரை யின்பமகதேடிவருவார்

பொதுவசனம்.

இவ்விதமாக பரமன்சொல்படி பகவான் இமையமலை சார்புக்கு போகிறபடியால் அம்மலைக்குபர்வத வடதிசையில் வருகின்றார் கும்ப முனியானவர் தன்னுடைய தாளை வருகிறார்.

அகஸ்தியர்-கவி.

மகத்தினில்மிகுத்தோரெல்லாம் வந்தடிபணிந்தாலே
இகத்தினில்யோகமெல்லாம் எட்டவேஅகத்திவைத்து
சுகத்தினில்மேலோரத்தை சுத்தமாபத்திகின்று
அகஸ்தியமுனிவன்தானும் அன்புடன்வருகின்றாரே

தரு.

அகஸ்தியமுனிவர் — வந்தார்-நல்ல
அருமறைபரிந்தவரு — முறைதெரிந்த
அகத்தியமுனிவர் — வந்தார்
மருத்துவமுனிவாசர் — சகத்தினில்போகமேலோர்
மெச்சியநீயன் — முனிவர்க்குச்சிதாபன்

சரு-மித்திராவருணன் — புத்திரிவரே
பத்திருமனதிடை — முத்தரென்பவரே -அகஸ்

தபத்தில்பிறந்தநல்ல — சாதனைதனக்கிவர்
அபதைநீர்க்கவல்லவர் — அன்புக்கிசைக்தோருன்
பாசமுந்துறந்தோர் — உலகநேசமுஞ்சிறந்தோர்

சரு-பலகலைசாஸ்திரம் — நிலைபதைதெரிந்து
விலைகிளாவேத — தலைவதைபரிந்து -அகஸ்

அஷ்டசித்தியானவர் — அன்பகின்பருனவர்
குட்டத்திரேகமானவர் — கிஷ்டைதினமுங்கொள்வோர்
இணையில்லாமுனிவர் — ஞான-அணையினில்கனிவர்

சரு-இருவிலத்தொழுதிடும் — குருகுலாசாதன்
பெருமருள்ஞானம் — வரும்சவபோதன் -அகஸ்

சருதிகல்பாதனை — சுத்தமனதில்வைத்து
அருதியுடையபோதன் — அன்பாமிகத்துதித்து
ஒன்றுமேலோடும் — வாசியில்-தாங்கியனுடும்

சரு-உத்தமனுகிய — வித்தகமூர்த்தி
சத்தியநெறியினில் — பெத்திட்டார்கீர்த்தி -அகஸ்

அகஸ்தியர்-கவி.

விண்ணொளிவெளியாகின்றும் விளக்கொளியாகற்றும்
மண்ணுள்ளமார்தரூடு மற்றுள்ளவுயிரும்யாவும்
தண்ணொளிமயமாமேனி தங்கியென்னுளத்தில்வளரும்
கண்ணொளிபோலநின்ற கடவுள்செஞ்சரணம்போற்றி.

வசனம்.

சரணம் சரணம் மாபா லீலாவிநோதா தங்கள் பாதாரவிந்த கமலங்களுக்கு அடியேன் சரணம் சரணம் திருமாலே.



அகஸ்தியர்-தரு.

எங்கேயேமைழக்கிருய் — நீன்னும்-யிங்கே
எனக்குப்பதில் — சொல்லும்
தின்னணிந்தோருக்கு — தெரிவையேகேழ்க்கவே
அங்கேவருங்குற்றந்தக் — கார்சொல்லும்யேற்கவே

விஷ்ணு.

குற்றம்வந்தாலும்கான் — தீர்க்குரேன்
எத்தேதுசொன்னாலும் — பார்க்குரேன்
சற்றேபொருத்துக்கொள் — தவமுனிஅகஸ்தியா
பித்துப்பிடித்தவன்போல் — பேசாதேஅகஸ்தியா

அகஸ்தியர்.

சும்மாயிருங்காணும் — திருமாலே-உந்தன்
சாருக்கெல்லாந்தெரிவேணுன் — பெருமாளே
பெம்மான்வாயால்சொல்ல — பெரும்பாவம்எனக்காச்சு
எம்மான்கேழ்வியுண்டு — எவர்சொல்வார்பேச்சு

விஷ்ணு.

பேச்சிப்டீசிருலென்ன — முடியுமே-அந்த
பெருமைதங்கையைப் — பார்க்கப்படியுமே
பூச்சிக்காட்டினுல்நீயும் — பொழுதுபோகுதே
ஆச்சியென்றஇங்கு — அவசரம்நடந்தவா

அகஸ்தியர்.

— பேசாதே
நீதுதெரியாமல் — நீட்டிகைவீசாதே
நெடுமாலே
கோதில்லாசிவன்பேச்சைக் கொண்டுபெண்ணைகேட்டால்
சாதிகுலம்கேழ்ப்பார் — தவருதனும்பட்டால்

விஷ்ணு.

— சொல்லவோ-வேணு
குலமதுகோத்திரஞ் — னல்லவோ
கோபாலனிருக்கிறே — நன்றுகப்பேசுருய்
கலமதுஅரியாமல் — வார்த்தையால்வீசுருய்
வனுவதுகுன்றியே

அகஸ்தியர்.

— சம்மதம்
அப்படியானுலே — சொல்லிதம்
ஆரு — இருக்கட்டும்நாரணு
லும் — சென்றிடும்காரணு
திக்கி

விஷ்ணு.

எம்மகன் பிர்மன் தன்னை — படைத்துமே-பிரச்
மண்மறுபுகழ்க்தனே — களித்துமே
சிந்தைய நீர்கண்டு — சிரப்பாகவேயின்று
சுந்தமலற்றணிந்து — கடிவாக்கின்று

அகஸ்தியர்-கவி.

இருக்கிறீர்ட்டருவருனல் பிதமெத்தர்க்கேமெதர்க்கும்
மிரும்லர்விர்சுனர்தன் மைக்தனைபமித்துவாரும்

விஷ்ணு-கவி.

பெருமையாசிஷ்ட்டிசெய்யும் பிர்மனைதேவரோடு
அருமையாயழைத்துவந்தேன் அன்புடன் வருகுவாயே.

அகஸ்தியர்-ஓடிக்கைத்தரு.

சத்தியலோகவாசர்களும்மெத்த — சந்தோஷமாச்சிவாரும்

விஷ்ணு.

சந்தோஷமானேனென்ற — விந்தையுடனேமுனியாரும்

அகஸ்தியர்.

பாருமென்றதிருமாலேகேசமிது — நல்லவேளைபோற்றி

விஷ்ணு.

போற்றிப்பதம்பணிந்த — சாற்றியனவர்வந்தோம்போற்றி

அகஸ்தியர்.

வந்ததினால்குருதமிக்கவர்தா — முகூர்த்தமெத்தன்சுவாமி

விஷ்ணு.

முகூர்த்தமென்றுபகர்ந்தாய் — சல்தவப்புரிந்துமின்றகேமி

அகஸ்தியர்.

தவம்புரிவேனென்றவிமலா — அக்கரைசேரும்செல்வோம்

விஷ்ணு.

செல்வோமென்றகும்பமுனியே — அல்லலடையாமலேகிவோம்.

அகஸ்தியர்-வேறுதரு.

வண்டளித்துளபுமாயா — முண்டகமலரின்றேயா
வாருமேஇமயகிரி — தேரவே
அண்டபிரான்றன்க்குப்பெண்ணை கண்டுபே
அம்பனென்றனு



௫௧

விஷ்ணு.

ஆசையதொல்வுஇக்தகர் — நீதேசமேமடக்கசெக்கோம்
அரியுமேகன்றுய் — தெரியவே
பீசனர்மொழிப்படிக்கு — இமயகிரிசாரனுக்கு
இப்பவேவந்தோம் — அப்பனே

அகஸ்தியர்-கவி.

தேவர்களும்முனிவருமே கும்பலாக
சிவன்றனக்குபெண்பார்க்க வந்தோமெல்லாம்
ஆவலுடன்திருமாலே சொல்லக்கேளும்
அருமையரைபார்வதியும் தந்தைதன்னை

விஷ்ணு-கவி.

யேவலிட்டப்படிக்கு பெண்ணருமைதந்தை
பீசனர்தனக்குமணஞ் செய்யவேண்டி
மேவிபிர்மலைபருகில் கூட்டமாக
விடுதிசென்று அரசனையுஞ் சேர்ப்போம்வாரீர்.

பருவதன்-கவி.

ஆதரவாய்பாக்கியமேதோ அரிகரிசருணமேபோற்றி
பாகமுனிவேடர்தன் பணிந்தேகொன்தாளிணைக்கே.

மேனன்-கவி.

நாகபேர்ரபுனம்கொண்டநாராயணாபோற்றியேபோற்றி
வேகமாவந்தசேதி வித்தகமுனியேசொல்வீர்.

வசனம்.

வாருங்கள் கிருஷ்ண பரமாத்மாவே வாரும் அகஸ்தியரே வாரும் சத்தியவாசரே தேவர்களே உங்கள்பாதம் சரணம்சரணம் யேதனால் எங்களைத் தேடிவந்தீர் சொல்லுங்களையா சுவாமி)

அகஸ்தியர்-தரு.

நாங்கள் வந்தசேதிதன்னை — பாங்குடனேஓதக்கேளும்
திக்குகள்ஒன்றில்லாமல் — தேசமேநீவாழிக்காரும்
கரு-தேடிவந்த — நாடிவித்தை
கூடிக்கேட்டால் — கொடுப்பேனென்பித்தை-நாம்

பருவதமேனன்.

கொடுக்கப்பதமென்னமோ கோவிந்தாமுரகரியே
இடுக்கம்வருமலின்று பெங்கள்குறைதெரிய
சரு-யெடுத்துசொல்லிய வார்த்தையென்னமோ
அடுத்துவந்தது சொல்லுமுன்னமே-கொடு

விஷ்ணு.

சொல்லவேண்டியேவந்த தோஷையென தங்கை
அல்லலடையாமலே ஆனூர்க்குவேணுமங்கை
சரு-ஆசையர்திரு மணமதுமுடிக்க
பேசியவந்தோம் இன்பங்களிக்க-சொல்

பருவத-மேனன்.

யெங்கள்தபத்தால்வந்த மங்கைபார்வதியாளை
யீசன்தனக்குகர மோசமாகுமேஇப்போ
சரு-எப்படிவந்தீர் அப்பனியோர்க்கு
கற்பனையில்லா ஒப்பிலாதவற்கு-யெங்க

அகஸ்தியர்-வேறுதரு.

நல்லதயிதாகல்லது நல்லது
சொல்லவந்தீர்ஞாயம் பின்னுமிருக்க
வல்லபார்வதியாளும் வந்தாள்தபத்தில்-நல்ல

பருவத-மேனன்.

சொல்லவோவந்தீர் மெள்ளவே
சொல்லவே வந்தீரையா
தோஷைபார்வதியாளும் வல்லபிதவத்திற்கு
வந்ததால் சந்தோஷந்தான்-சொல்

விஷ்ணு.

பெண்ணதீர்வேதே பெண்ணதீர்
பெண்ணதீர் வேரேமனம்
பன்னியதபத்திற்கு பெண்ணாகவந்துதித்த
பேரின்ப மானீரே

பருவத-மேனன்.

பாக்கியம்நாங்கள் செய்தபாக்கியம்
பாக்கியமாகவந்து பாலன்கலியைத்தீர்க்க
ரோக்கியத்துடனின்று கொடியில்மணமுடிக்க



அகஸ்தியர்-கவி.

ஆதியில்நீங்கள்செய்த அருந்தபபலத்தினாலே
மாதாவும்தந்தையென்று மகளாகவந்துதிக்க
நீதிசேர்பார்வதிக்கி கொடிமணஞ்செய்யவேண்டி
காதலால்கும்பலாக கைலைக்கிவருகுவீரே.

வசனம்.

கேளு மகாராசனே கேளுமம்மா ராசபத்தினியே நீங்கள் ஆதியில் புத்திரசந்தானமில்லாமல் அரிதாகிய தபஞ்செய்தபடியால் உங்கள் கலியைத்தீர்க்க பார்வதியே வந்து செல்வியாய் உதித்து பின்னால் உங்களுக்கு பரமன் மோக்ஷம் தருவார் இனி பரமர்க்கு திருமண முடிக்க கைலைநாடி செல்வோம் வாரும் மகாராசனே ஆனால் பார்வதியை மணக்கோலமாக அலங்கரித்து அழைத்து வாரும் இராசனே.

அகஸ்தியர்-ஓடிதரு.

வாருங்கள்ராசர்களே அந்த
வளர்பெருங்கைலைக்கு சென்றிடுவோம்

விஷ்ணு.

சேருவோம்அனைவருமே அந்த
சிவன்பாதம்கண்டிட நல்மனதா

பருவதன்.

நல்லபதங்கொடுக்கும் மங்கைபார்வதியுமனமகிழ

மேனன்.

வல்லவரேவாரீர் அந்த
வள்ளல்சிவன்தன்னை கண்டிடவே

அகஸ்தியர்.

காடுமலைகுன்றுகானாறு தாண்டியேகடிவந்தோம்

விஷ்ணு.

நாடுதேசங்கடந்து நல்லப்பதியிங்குவந்திடவே

பருவதன்.

பெங்கள்குறையகற்ற யீசன்டிதன்னைபோற்றிசெய்து

மேனன்.

திங்கள்முகத்தழகியை அந்த
சிவனார்தனக்கு மணமுடிக்க

அகஸ்தியர்-கவி.

கண்டிட்டோம்கைலைதன்னில் காளையியேறு மீசன்



விஷ்ணு-கவி.

தண்டிசேல்பாணர்பாதம் சக்கிராயுதமாகப்போற்றி

பருவதன்-கவி.

பெண்டணியானகண்ணே பேரின்பமடைந்தால்

மேனன்-கவி.

அண்டணியீசன்பாதம் மங்கையாள்போற்றினேனே

வசனம்.

சரணம் சரணம் சர்வலோக தயாபர னாமனைவரும் இந்த கைலாசகிரிவந்து சேர்ந்து பரமன் திருவடியை சன்னுற்று அவருடைய பாதாரவிந்தம் கோடி கோடி தரிசனங் கொண்டேன் பரமாத்மக்கடவுளே.

பரமசிவன்-கவி.

சித்தமாகீங்கள் திருவடிபணிந்தீர்
அத்தனேவரும் அருமுனியோரும்
பத்தியமேனன் பருவதராசன்
எத்தேசக்காலம் யெல்லோரும்வாழி

வசனம்.

வாருங்கள் மைத்துன வாரும் அகஸ்தியரேவாரும் யெனக்கு மாமன் மாமியாகவந்த பருவதராசன் மேனன் நீங்கள் யாவரும் சகித்து வாழ்ந்திருக்க ஆசீர்வாதந்தந்தேன் இதகாலம் இந்த பார்வதி பெண்ணைப்படி முகூர்த்தகாலன் நேமித்துவிட்டீரோ இனி தடையன்றி மணமுடிக்கவேண்டும் தேவர்களே.



பரமசிவன்-கவி.

சித்தமுமகிழ்வியோடு சிவன்தனைப்பார்வதிக்கும்
பத்தியர்திருமாலோடு பாக்குள்ள அகஸ்தியரும்
வைத்திட்டாள்முகூர்த்தம் மனதுமகிழ்வியாக
யெத்திசைதேவர்சூழ இல்லமணமுடிக்கலுற்றார்.

பரமர்க்கும்-பார்வதியம்மனுக்கும்-முகூர்த்தமுடிப்பது-தரு.

அன்பருக்கன்பனானசிவன் ஆதியில்சொன்னபடி
உன்பர்மகிழ்ந்திடவே உள்ளமகிழ்ந்திருந்தார்
பாதிமதியணியுஞ்சிவன் பார்வதியாள்தனக்கு
நீதியாசொன்னதுபோல் நேருமணமுடிக்க
வேதியர்கோஷ்டமிட விண்ணவர்திசையிக்க
சோதிசிவன்தனக்கு பார்வதியைகருதிமணமுடித்தார்
அச்சுதன் அபிஷேகாவிர்தன் அகஸ்தியமுனிவர்கூடி
இச்சையாதிருமணமும் கல்விசனுக்கேமுடித்தார்

பெர்து-கவி.

சிந்தையதுமகிழ்ந்திடவே வனவோர்கூடி
சிவன்தனக்கும்பார்வதிக்கு மணமுடித்து
முகூர்த்தநேர்வசனமும்சரியெய்ய
ஆரயன்னியர்கள் மலர்கள்தூர்க்க
விர்ந்திப்தாமலேயர்சன் மேனனானும்
வேணதாருசாயுச்சியபதமும்பெற்று
குர்கழிக்ரபார்வதியாள் வாமபாகம்
குவலையத்தில்பாரிய வீற்றிருந்தாள்

வசனம்.

இப்படியாக பரமசிவனுக்கும் பார்வதிக்கும் மணமுடித்து அவாள்வாள் இல்லறஞ்சேர்ந்தார் பரமன்கைலையில் பார்வதியோடு இடப்பாகந்தந்து இந்திரர் வானவர் புஷ்பமலர்சொரிய கைலையில் வீற்றிருந்தாரென்பதாம் இந்த நாடகத்தை நடிப்போரும் கேட்போரும் பார்த்தோரும் சகல சம்பத்தும் பெற்று வாழக்கடவதென்பதாம் மங்களம் சுபம் சுபம் சுபம்.

பார்வதி கலியாண நாடகம்.

முற்றிற்று.

௨௪

சிவமயம்.

மகாமகுத்தவம்பொருந்திய கும்பமுனிவர்
திருவாய்மலர்ந்தருளிய
உமாமகேஸ்வர ஸம்பாஷணையாகிய

# ஈஸ்வர நாடி சோதிடம்.

## இந்த ஓர் அருமையானசோதிடநூல்

அன்பர்காள்!

உலகில் ஜனனமான மானிடர்கள் வாழ்நாட்களைகுறித்து சோதிடசாஸ்திரமென்பது சகலருக்கும் தெரிந்தவிஷயம். இவைகளின் பலாபலன்களை உரைக்கும் பலவிதமான சோதிட சாஸ்திரங்கள் வெளிவந்திருப்பினும், உமாமகேஸ்வர சம்பாஷணைரூபமான "ஈஸ்வரநாடி" என்னும் சோதிடம் இதுகாறையிலும் வெளிவராதிருந்தன தற்சமயம் நாங்கள் சில மடாலயங்களிலிருந்து ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு தக்கசோதிடர்களால் சீர்திருத்தபெற்று வெளிவந்திருக்கின்றன இதில் பிதுர்காரகனுகிய சூரியகாண்டம், மாதுர்காரகனுகிய சந்திரகாண்டம், சகோதரக்காரகனுகிய குஜகாண்டம், வித்தியாகாரகனுகிய புதகாண்டம், புத்திரகாரகனுகிய குருகாண்டம், களத்திரகாரகனுகிய சுக்கிரகாண்டம், ஆயுள்காரகனுகிய சனிகாண்டம், ஆகிய சப்தகாண்டங்களையும் வாங்கி வாசித்தவர்களுக்கு சோதிட விபரம் தாங்களே சரியாய் கவனித்துக்கொள்ளப்படும். ஆகையால் இந்தசோதிடநூல் அநேககாலமாக வெளிவராதிருந்தமையால் அனேகசோதிடவல்லபர்கள் வெளிப்படுத்தும்படி கேட்டுக்கொண்டமையாலும் அங்குள்ளசம்வசனரூபமாய் அந்தஅந்தலக்கனங்களுக்கு சக்கரங்களும் ஏற்படுத்தி காண்டம் ஒன்றுக்கு 720 - சக்கரங்கள் அமைத்து தற்சமயம் வெளிவந்துலாவுகின்றன.

உ5893 காண்டங்களின் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1-வது, சூரியகாண்டம் விலை ரூபா | 1 8 0 | | |
| 2-வது, சந்திரகாண்டம் | 1 8 0 | 5-வது, குருகாண்டம் | 1 0 0 |
| 3-வது, குஜகாண்டம் | 1 0 0 | 6-வது, சுக்கிரகாண்டம் | 1 0 0 |
| 4-வது, புதகாண்டம் | 1 0 0 | 7-வது, சனிகாண்டம் | 1 0 [illegible] |

7 காண்டமும் ஒரேதடவையில் மொத்தமாய் வாங்குபவர்களுக்கு விலை ரூபா. 7 0 0

எமதுவிலாசம்:—

ஷை, கோவிந்தராஜுமுதலியார்,
நெ, 34, முத்துகிருஷ்ணன் தெரு,
மின்ட்பின்டிங்போஸ்ட், மதராஸ்.